ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்


11.11.2009 - மலர் 06, இதழ் 36



## தனிப் பண்புகள் கொண்ட 'சிகிரியா' ஓவியங்கள்



'தொழுநோய்' பற்றிய அச்சத்தை தவிர்ப்போம்



உலகின் பழைமையான நகரம்



ரஷ்ய 'ரொக்கெட்'டில் சீன செய்மதி



## 'கீஸா'வின் பெரிய பிரமிட்

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கிளர்ச்சியின் முடிவு

இரண்டாம் இராஜசிங்க மன்னனுக்கு எதிராக செயல்பட்ட சூழ்ச்சியாளர்களின் முயற்சி படிப்படியாக பலவீனம் அடைந்தது? எனினும், மன்னன் மீது இருந்த கோபம் சிறிதும் குறையவில்லை. இளவரசன் மன்னர் இருக்கும் கலஉட கிராமத் திற்குச் சென்றது குறித்தும் அவர்கள் கலவரமடைந்தனர். சில நாட்கள் கழிந்தன.

சூழ்ச்சிக்காரர்கள் மத்தியில் பல முரண்பாடுகள் தோன்றின. அது பெரும் கலவரமாக மாறியது. அவர்கள் ஒவ்வொருவரும் தமக்குள் மோதிக்கொண்டனர். அதனால் பலர் இறந்தனர். இதற்கிடையில், மன்னனுக்கு மிகச்சார்பான திசாபதி ஒருவன் பெருங்குழு வொன்றைத் திரட்டினான். அவர்கள் தம் கையில் அகப்பட்ட மக்கள் அனைவரை யும் கொன்றபடி தலைநகரை நோக்கிப் பயணித்தனர். தம்மால் முடிந்தவரையில் மன்னரின் எதிரிகளை அழித்தனர். கிளர்ச்சித் தலைவனாகிய அம்பன் வெலரால என்பவனையும் கைது செய்தனர். அவனைச் சித்திரவதை செய்வதற்காக ஒல்லாந்தரிடம் ஒப்படைத்தனர்.

இக்காலகட்டத்தில் புதுமைகளை முன்கூட்டியே வெளியிடும் ஆற்றல் படைத்தவர் என கூறிக்கொண்டு சந்நியாசி ஒருவர் இலங்கைக்கு வந்தார். மன்னனதும் மக்களதும் அனுமதியில்லாமல் கோயில்களை அழிக்கும் நடவடிக்கையில் அவர் ஈடுபட்டார். பலர் அவரின் கருத்துக்களுக்கு இணங்கினர். அவருடன் ஒன்றிணைந்தனர். பின்னர் ஆராய்ந்து பார்த்ததில் இளவரசன் விஜயபாலனின் மகனே அந்த சந்நியாசி என தெரியவந்தது. அந்த இளவரசன் இரண்டாம் இராஜசிங்கனின் சகோதரன் ஆவார். போர்த்துக்கேயரிடம் அடைக்கலம் தேடிச்சென்ற விஜயபால இளவரசன் கோவாவில் மரணமடைந்தான். எப்படியோ சந்நியாசியின் விபரங்கள் அனைத்தையும் அறிந்தபின்னர் மன்னன் கோபமடைந்தான். அவனை உடனடியாக சிறைப்பிடிக்க கட்டளையிட்டான். ஆனால் சந்நியாசியோ, அதற்கு முன்பதாகவே ஒல்லாந்தரிடம் தப்பிச் சென்றுவிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் புதிய வேலைத்திட்டம்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம் எதிர்வரும் வருடத்திலிருந்து அமுலுக்கு வரும் வகையில் புதிய வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

அதாவது, பாடசாலைக்கு எடுத்துச்செல்லும் புத்தகப்பை எடைகூடியதாக இருப்பதால், பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லும் வயதிலேயே பல்வேறு நோய்களுக்கு உட்படுகின்றனர் என வைத்தியர்கள் கண்டறிந்துள்ளனர். இதனை அடுத்து, புத்தகப்பையின் எடையைக் குறைக்கும் விதத்தில் பக்கங்களின் எண்ணிக்கை அதிகமாகவுள்ள பாடப்புத்தகங்களை பல தொகுதிகளாகப் பிரித்து அச்சிடவும், 80 மற்றும் 120 பக்கங்களைக்கொண்ட அப்பியாசக் கொப்பிகளைப் பாவனைக்குட்படுத்துவதனை பிள்ளைகளுக்கு வழக்கப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.



## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை:—

# நலன்புரி முகாம் மாணவர்களின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன

நலன்புரி முகாம்களிலிருந்து இவ்வாண்டின் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் கடந்த மாதம் 31 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் 5000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் நலன்புரி முகாம்களிலிருந்து மேற்படி பரீட்சைக்குத் தோற்றியிருக்கின்றனர். சித்தியடைவதற்காக இவர்கள் பெற்றிருக்க வேண்டிய அதிகூடிய புள்ளி 111 ஆகும் என பரீட்சை திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

வடக்கின் நிவாரணக் கிராமங்களிலிருந்து இப்பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் விண்ணப்பப்படிவங்கள் பெரும்பாலானவற்றில் காணப்பட்ட சிக்கலுக்குரிய நிலைமைகள் காரணமாகவே இவர்களுக்கான பெறுபேறுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது. குறித்த பெறுபேறுகள் பிரதேச வலயக் கல்விப் பணிப்பாளர்களினூடாக நிவாரணக் கிராமங்களில் கல்வி நடவடிக்கைகள் இணைப்பு அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் திருகோணமலை ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள நிவாரணக் கிராமங்களில் 49 பரீட்சை மத்தியநிலையங்கள் நிறுவப்பட்டு, புலமைப்பரிசில் பரீட்சை நடைபெற்றதோடு, இவ்வாண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய ஏனைய மாணவர்களின் பெறுபேறுகள் கடந்த மாதம் முதல் வாரத்தில் வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Vijey விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# மூன்றாம் தவணை பரீட்சை வினாத்தாள் தயாரிக்க 9 கோடி நிதி ஒதுக்கீடு



பாடசாலைகளில் மூன்றாம் தவணைப் பரீட்சை வினாத் தாள்களை தயாரிப்பதற்கான நடவடிக்கைகளுக்காக பரீட்சைக் குழுக்களுக்கு 9 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மூன்றாம் தவணைப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் தயாரிக்கும் பணிகளை பாடசாலை மட்டத்தில் அல்லது பல பாடசாலைகள் ஒன்றிணைந்து செயற்படுத்துவதற்கு பரீட்சைக் குழுக்களை அமைத்துக் கொள்ளுமாறு கல்வி அமைச்சினூடாக அனைத்து பாடசாலை அதிபர்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது.

இரண்டாம் தவணைப் பரீட்சை, வலயக் கல்வி காரியாலய மட்டத்தில் நடைபெற்றபோது, பல பிரதேசங்களில் மோசடிகள், குளறுபடிகள் இடம்பெற்றமை தெரியவந்ததை அடுத்து, மூன்றாம் தவணைப் பரீட்சை வினாத்தாள் தயாரிக்கும் பணிகளை பாடசாலை மட்டத்தில் அல்லது பல பாடசாலைகள் ஒன்றிணைந்து செய்யவேண்டும் என கல்வி அமைச்சு தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 2009, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு ஓர் அரிய வாய்ப்பு

இவ்வருடம் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் விபரங்களை 'விஜய்' இல் பிரசுரிக்க விரும்புபவர்கள், மாணவரின் விபரத்துடன் அவரது புகைப்படத்தையும் இணைத்து பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன்,

**புலமைப்பரிசில் சித்தியடைந்தோர்,**
**'விஜய்'**
**த.பெ. எண் 2037, கொழும்பு.**


என்ற முகவரிக்கு நொவெம்பர் மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள். ஒரே வகுப்பில் பலர் சித்தியடைந்திருப்பின் அவர்கள் தங்கள் ஆசிரியர்களுடன் குழுவாக எடுத்துக்கொண்ட புகைப்படங்களையும் அனுப்பலாம். இதற்காக கட்டணங்கள் எதுவும் அறவிடப்படமாட்டாது.

# ஆண், பெண் பார்வைத் திறன்

**அண்மையில் இங்கிலாந்தில் பார்வைத்திறனைப் பற்றி ஓர் ஆய்வு நடந்தது. ஆண்கள் மற்றும் பெண்கள் அடங்கலாக மொத்தம் 48 பேர் இந்த ஆய்விற்கு உட்படுத்தப்பட்டனர்.**

**ஆய்வின்போது, ஒரு வெள்ளைத் தாளில் நீண்ட கோடு வரையப்பட்டு, அதன் மையத்தில் ஒரு சிறு புள்ளி வைக்கப்பட்டது. 100 சென்ரிமீற்றர் தொலைவில் வைத்து அப்புள்ளியை அவதானிக்குமாறு அனைவரிடமும் கூறினர். அப்போது குறித்த தொலைவில் அந்த தாள் இருந்தபோது ஆண்கள் அந்தப் புள்ளியை நன்கு அடையாளம் கண்டு கொண்டனர். ஆனால், அந்த தாள் அதே தொலைவில் வைக்கப்பட்டிருந்த நிலையில், பெண்களால் அந்தப் புள்ளியை காண முடியவில்லை. குறித்த தாள் 50 சென்ரிமீற்றர் முன்னால் கொண்டுவரப்பட்ட பிறகுதான் பெண்களால் அப்புள்ளியை கண்டுகொள்ளமுடிந்தது.**

**இதில் இருந்து ஆண்களுக்கு தூரத்தில் உள்ள பொருட்களை பார்க்கும் திறனும், பெண்களுக்கு அருகில் உள்ள பொருட்களை பார்க்கும் திறனும் சிறப்பாக இருப்பது கண்டறியப்பட்டது. இதற்கான காரணம் குறித்து ஆய்வாளர்கள் கூறும்போது; "ஆண்களுக்கு முற்காலத்திலிருந்தே (வேட்டையாடிய காலம் முதலே) நீண்ட தூரத்தில் உள்ள இலக்கை (மிருகங்கள் உள்ளிட்ட உணவு மற்றும் எதிரிகள்) குறிவைக்க வேண்டிய தேவை இருந்தது. அத்துடன், பெண்கள் அருகில் உள்ள பொருட்களைத் தேடுவதிலேயே அதிகம் ஈடுபட்டனர். அன்றிலிருந்தே இந்நிலை வழக்கமாகிப் போனதால், ஆண்கள்-பெண்களின் பார்வை நரம்புகளில் இந்த பரிணாம மாற்றமும் நிலைத்துவிட்டது. இதுவே ஆண், பெண் பார்வைத்திறன் மாற்றத்துக்குக் காரணமாக இருக்கக்கூடும்" என்கின்றனர்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமியதிர்ச்சிக்கு மனிதனும் ஒரு காரணம்





19 ஆம் நூற்றாண்டு முதல் 200க்கும் மேற்பட்ட பெரிய பூமியதிர்ச்சிகள் ஏற்படுவதற்கு மனிதனின் செயல்களே காரணம் என 'டி ட்சைட்' என்ற ஜேர்மன் சஞ்சிகை தனது மாதாந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இப்பூமியதிர்ச்சிகளில் ஏறக்குறைய 100 பூமியதிர்ச்சிகள் மனிதன் பல்வேறு சுரங்கங்களை வெட்டியதால் ஏற்பட்டவையாகும். இயற்கை எரிவாயு, எண்ணெய் அல்லது தண்ணீர் ஆகியவற்றை பூமிக்கடியிலிருந்து பிரித்தெடுப்பது, திரவங்களை ஆழ் கிணறுகளுக்குள் செலுத்துவது, செயற்கை நீர்த்தேக்கங்களை உருவாக்குவது ஆகியவை ஏனைய சில காரணங்களாகும்.


உதாரணமாக, 1989 இல் அஸ்திரேலியாவில் உள்ள நியூகேஸ்டல் நகரில் ஏற்பட்ட பூமியதிர்ச்சிக்கு காரணம் நிலக்கரிச் சுரங்கம் வெட்டப்பட்டதே என்று விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

தொன்றுதொட்டு பூமியதிர்ச்சிகள் உலகை ஆட்டிப்படைத்து வந்தாலும் சமீப காலத்தில் உலகில் ஆங்காங்கே ஏற்படும் பூமியதிர்ச்சிகள் அதிகரித்து வருவதோடு, அவற்றால் ஏற்படும் சேதங்களும் அதிகரித்துள்ளன.

இப்பூமியதிர்ச்சியில் 13 பேர் உயிரிழந்தனர். 165 பேர் காயமடைந்தனர். இதனால், ஏற்பட்ட பொருட்சேதமோ ஏறக்குறைய 350 கோடி அமெரிக்க டொலர். இங்கு சுமார் 200 வருடங்களுக்கு முன்பு சுரங்க வேலை ஆரம்பிக்கப்பட்டது. அன்று முதல் அதிலிருந்து கிடைத்த வருமானத்தை விட இந்த பூமியதிர்ச்சியால் ஏற்பட்ட நட்டமே அதிகமாக இருப்பதாக கணிப்பிடப்பட்டுள்ளது.

# நீரில் நடக்கும் 'ரொபோ'

**பொதுவாகவே மனிதன் விஞ்ஞானத்தின் விந்தையால் பல அற்புதங்களை நிகழ்த்தியிருந்தாலும் அவனால் முடியாத காரியங்களும் பல இருக்கின்றன. அவற்றில் ஒன்றுதான் நீரின் மேல் நடப்பது.**



## நடக்க முடியாததன் காரணம்?

நீரின் அடர்த்தியைவிட நமது உடலின் அடர்த்தி கூடுதலாக இருப்பதே நாம் நீரின் மேல் நடக்க முடியாமைக்குரிய முக்கிய காரணமாகும். நமது உடலின் அடர்த்தி கூடுதலாக இருப்பதால் நாம் நீரில் மூழ்கி விடுகிறோம். எனினும், தொடர்ந்து வழங்கும் விசையால் நாம் நீந்துகிறோம்.


எனினும், சில யோகிகள் தமது கடினமான பயிற்சியால் நீரின் மேல் அசைவற்றுப் படுத்திருக்கும் அற்புதத்தை நிகழ்த்துகிறார்கள்.எனினும், சாதாரண மனிதனுக்கு இது சாத்தியப்படாது. கடினமான பயிற்சியின் பின்னே இது சாத்தியப்படும். ஆனால், சில பூச்சிகள், சிறு உயிரினங்கள் நீர் நிலை மீது நடந்து, நின்று பல அற்புதங்கள் புரிவதைக் கண்டு வியந்திருக்கிறோம்.

அந்தவகையில், ஆகாயத்தில் பறக்கும் ஆசையும் மனிதனுக்கு என்றுமே இருந்து வந்தது. இதனுடன், நீரில் நடக்கும் ஆசையும் தொடர்ந்தது. ஆகாயத்தில் பறக்கும் ஆசையை விமானம் மூலமும் நீரில் நடமாடும் ஆசையை படகு, பாய்மரக் கப்பல், கப்பல் என பல்வேறு சாதனங்களைப் படைத்தும் ஓரளவு திருப்திப்பட்டுக்கொண்டான். எனினும், நேரடியாகவே நீரின் மேல் நடக்கமுடியாமல் போனது மனிதன் முன் உள்ள மிகப்பெரிய சவால்தான்.

## சர்ஃபேஸ் டென்ஷன்

நீர்மட்ட அழுத்தம் (சர்ஃபேஸ் டென்ஷன்) நீரின் பரப்புக்கு மேல் விரிக்கப்பட்ட ஒரு போர்வை போல போர்த்தப்பட்டிருக்கின்றது. நீரின் அடர்த்தியை விடவும் குறைவான ஒன்று நீரின் மேல் வைக்கப்பட்டால் அது அந்த நீர்மட்ட அழுத்தப் போர்வையை உடைக்காமல் இருந்துவிடுவதால் நீரின் மேல் நிற்கமுடிகின்றது.

பல பூச்சிகள் மற்றும் சில சிறுவகை உயிரினங்கள் இதைப்போல் நீரின் மேல் நடப்பதைப் பார்த்த மனிதன் இன்று அதே போல் நீரின் மேல்நடக்கும் 'ரொபோ' ஒன்றை உருவாக்கியுள்ளான்.






## புதிய கண்டுபிடிப்பு

ஆய்வாளரும் கார்னேகி மெலான் பல்கலைக்கழகப் பேராசிரியருமான மேட்தின் சிட்டி இதேபோன்ற ரொபோ ஒன்றை உருவாக்குவதில் தீவிரமாகச் செயல்பட்டார். இதன் விளைவாக மிகச்சிறிய, மிகக்குறைந்த நிறை கொண்ட இந்த ரொபோ நீரின் மேல் நடக்கிறது. நாலா திசைகளிலும் திரும்புகிறது. மூலைகளை உணர்ந்து மோதாமல் திரும்புகின்றது.

மிகக்குறைந்த நிறை கொண்ட ஆனால், மிக்க உறுதி கொண்ட காபன் இழைகளைப் பயன்படுத்தி இந்த ரொபோ தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் கால்களில் நீர் ஒட்டாத டெஃப்லாண் பூச்சு பூசப்பட்டிருக்கிறது. இதனுள் பொருத்தப்பட்டிருக்கும் சிறிய மின்கலம் அதற்குத் தேவையான மின்சக்தியை வழங்கிக் கொண்டிருக்கின்றது.

மேட்தின் சிட்டியால் உருவாக்கப்பட்ட இந்த ரொபோவால் விநாடிக்கு 5 செ.மீற்றர் தூரம் வரை நீரின்மேல் நடந்து செல்லமுடிகிறது. அவர் இவ்வேகத்தை மேலும் அதிகரிக்கும் முயற்சியில் ஈடுபட் டுள்ளார். அந்த வகையில், இதனை மேலும் இருபது மடங்கு வேகம் கூடியதாகத் தயாரிக்க முடியும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இன்று நீர்நிலைகள் மாசுபடுத்தப்பட்ட நிலையில், நீரின் மேல் நடந்து சென்று, தனக்கான பணிகளைச் செய்து முடிக்கும் ஓர் இயந்திர சேவகன் மனிதனுக்கு மிகத் தேவையாக உள்ளான். அந்தத் தேவை இப்பொழுது பூர்த்தி செய்யப்படுகிறது. மேலும், குழந்தைகளுக்கு சர்ஃபேஸ் டென்ஷன் குறித்து விளக்க ஓர் அறிவியல் விளையாட்டுச் சாதனமாக பயன்படுத்தப்பட இருக்கிறது.

அதனுள் ஒரு 'கெமரா' பொருத்தப்படும்போது நீர் நிலைகள் பற்றிய அறிவியல் ஆய்வுகளுக்கு இது பயன்படலாம். குறிப்பாக, மாசு படிந்த இடங்களில் பணிபுரியும் ஆய்வாளர்களுக்கும் உதவியாளர்களுக்கும் ஆபத்தை விளைவிக்கக்கூடிய இடங்களிலும் இந்த இயந்திர ரொபோவைப் பயன்படுத்தலாம். அத்துடன், நீர்நிலைகளுக்குள் செல்லும் உளவாளியாக உலக நாடுகளின் பல ராணுவங்கள் இதனைப் பயன்படுத்தும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**-இரஞ்சித் ஜெயகர்**


படத்தை இங்கே ஒட்டவும்



விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்:..............................
முகவரி:..............................
..............................
பாடசாலை:..............................
வகுப்பு:..............................
திகதி:..............................

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்.

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2097
கொழும்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 2012 இல் சந்திரனின் மேற்பரப்பில் ரஷ்ய நடவடிக்கை மையம்



2012 ஆம் ஆண்டு சந்திரனின் மேற்பரப்பில் விண்வெளி மத்தியநிலையமொன்றை அமைப்பதற்கு ரஷ்யாவின் லூனா வேலைத்திட்டம் இப்பொழுதிருந்தே பல ஆயத்தங்களைச் செய்து வருகின்றது. எதிர்காலத்தில் வேற்றுக்கிரக பயணங்கள் குறித்து பல்வேறு ஆய்வுகளை நடாத்துவதே இதன் நோக்கமாகும். அதற்கமைய, இத்தகைய ஆய்வுகளை மேற்கொள்வதற்குரிய சகல வசதிகளுடன்கூடிய நடவடிக்கை மையமொன்றை அமைக்க ரஷ்யா திட்டமிட்டு வருகின்றது. இதற்காக இந்தியாவின் உதவியையும் ரஷ்யா நாடியுள்ளது.

நடவடிக்கை மையத்தை அமைப்பதற்கான தகுதி வாய்ந்ததும் சிறப்பு மிக்கதுமானதொரு இடத்தை தேடிக்கண்டுபிடிப்பதற்காக ரஷ்ய விண்வெளி ஓடமொன்று பயன்படவுள்ளது. சந்திரனின் மீது பயணிக்கக்கூடிய அந்த ஓடமானது, சந்திரனின் மேற்பரப்பிலிருந்து கற்கள் மற்றும் மண் ஆகியவற்றை பரீட்சிப்பதற்குரிய வசதியைக் கொண்டுள்ளது. இந்த விண்ணோடத்தை நிர்மாணிக்கும் பொறுப்பு இந்தியாவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

## புதனில் விசாலமான பள்ளம்



நாஸா விண்வெளிக்கு அனுப்பிய 'மெசெஞ்சர்' விண்கலம், புதன் கோளில் மிகப்பெரிய பள்ளம் இருப்பதைக் கண்டறிந்துள்ளது. பூமியைத் தவிர ஏனைய கோள்களில் என்னென்ன வளங்கள் உள்ளன?, அங்கெல்லாம் மனிதர்கள் வசிப்பதற்கு உகந்த சூழ்நிலை நிலவுகிறதா? போன்ற ஆய்வுகள் சூடுபிடித்து வருகின்றன. இதற்காக பல நாடுகளும் பல கோள்களை நோக்கி பல்வேறு விண்கலங்களை அனுப்பி ஆய்வில் ஈடுபட்டு வருகின்றன. அவ்வாறான ஒரு நோக்கத்தில் நாஸா அனுப்பிய 'மெசெஞ்சர்' விண்கலத்தில் பொருத்தப்பட்டிருந்த கெமராவினூடாக புதன் கோளின் பல்வேறு படங்கள் எடுக்கப்பட்டிருந்தன.

நாஸாவுக்குக் கிடைத்த அந்தப் படங்களில், புதன் கோளில் விசாலமான பள்ளமொன்று இருப்பதைப் பார்த்து வியப்பில் ஆழ்ந்துள்ளனர் விஞ்ஞானிகள். சுமார் 260 கிலோ மீற்றர் விட்டத்தை உடைய இப்பெரிய பள்ளமானது, எப்படி ஏற்பட்டது? என்ற கேள்விக்கு சரியான விடை இதுவரை கிடைக்கவில்லை. எனினும், தற்போது இது குறித்த ஆய்வில் இறங்கியுள்ளனர் நாஸா விஞ்ஞானிகள்.






## சீனாவில் பறக்கும் தட்டு



சீனாவின் ஷென்டொங் மாநிலத்தில் உள்ள மக்கள், கடந்த சில வாரங்களுக்கு முன்னர் அப்பிரதேசத்தின் வான்பரப்பில் இரு பறக்கும் தட்டுகள் சஞ்சரிப்பதை அவதானித்துள்ளனர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.


நீள்வட்ட வடிவத்தையுடையதும் வெள்ளை நிற மூடுபனி போன்றதுமான இந்த இரண்டு விண் பொருட்களும் வான்பரப்பில் ஏறக்குறைய 300 கிலோமீற்றர் அளவு பிரதேசத்தைக் கடந்து சென்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அதன்போது, அவ்விரண்டு விண்பொருட்களின் பின்புறங்களிலும் ஒளிக்கீற்றினைக் காணக்கூடியதாக இருந்ததாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

## ரஷ்ய ரொக்கெட்டில் சீன செய்மதி

ரஷ்யாவுக்குச் சொந்தமான ப்ரோடன்-எம் எனும் ரொக்கெட் ஆனது அண்மையில் சீனாவுக்கு சொந்தமான தக்வல் தொடர்பு செய்மதி ஒன்றை வெற்றிகரமாக விண்வெளிக்குக் கொண்டுசென்றது.

கசகஸ்தானில் உள்ள 'பைகனூர்' விண் ஏவுதளத்தில் இருந்து, விண்வெளிக்குச் சென்ற ரஷ்யாவின் ப்ரோடன்-எம் ரொக்கெட் மூலம் ஆசியா செட்-5 வகையைச் சேர்ந்த தகவல் தொடர்பு செய்மதியொன்றே இவ்வாறு விண்வெளிக்குக் கொண்டுசெல்லப்பட்டது. இந்த செய்மதியானது ஹொங்கொங்கில் அமைந்துள்ள ஆசிய செய்மதி நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

## 'செவ்வாய்' சிவப்பானது எப்படி?



சூரிய குடும்பத்தில் பூமியை அடுத்து இருப்பது செவ்வாய்க் கிரகமாகும். சிவப்பு நிறத்தில் காணப்படுவதால், அது 'செங்கிரகம்' என்றும் அழைக்கப்படுகிறது. அங்குள்ள தாதுக்களும் அவற்றின் துருக்களுமே செவ்வாய்க்கு சிவப்பு நிறத்தைக் கொடுப்பதாக இதுவரை நம்பப்பட்டு வந்தது.

எனினும், செவ்வாய்க் கிரகத்தின் சிவப்பு நிறத்துக்கு தற்போது ஒரு புதிய காரணத்தைக் கூறுகிறார்கள் விஞ்ஞானிகள். அமெரிக்காவின் நாஸா ஆராய்ச்சி நிறுவனம், ஐரோப்பிய விண்வெளி முகவர் நிலையம் (ESA), சர்வதேச விண்வெளி நிலையத்தின் ஹபள் ஆய்வுக்குழு ஆகியவை இணைந்து செய்த ஆராய்ச்சியிலிருந்தே இது தெரியவந்துள்ளது.

அந்த ஆராய்ச்சியின்படி; 100 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் செவ்வாய்க் கிரகம், பூமியைப் போலவே காட்சி அளித்திருக்கலாம். அப்போது அங்கு நீரோட்டம் இருந்திருக்கும். எனினும், சுமார் 10 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு நீரோட்டம் வற்றிப்போனது. காலப்போக்கில் கிரகத்தின் சுழற்சியால் அங்குள்ள பாறைகளில் இருந்து சிவப்பு நிற தாதுக்கள் வெளிப்பட்டன. காலம் செல்லச் செல்ல அவற்றின் மீது துருக்கள் படிந்தன. அத்துடன், அங்கு நீரோட்டம் இல்லாமல் போனதாலும், அங்குள்ள வாயுக்களின் பாதிப்பாலும் அவை தற்போதைய சிவப்பு நிற மாற்றத்தை அடைந்திருக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த ஆராய்ச்சி முடிவுகள் 2004 ஆம் ஆண்டு செவ்வாயிலிருந்து எடுத்துவரப்பட்ட மண் மாதிரிகளை ஆய்வுக்கு உட்படுத்தியதை அடுத்து தெரியவந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொழுநோயாளி ஒருவர்

# தொழுநோ

**தொழுநோய் குணப்படுத்த முடியாத நோய் என்ற கருத்து பண்டைய காலத்தில் நிலவியது. இந்த நோய்க்கு உரிய சிகிச்சை முறைகள் கண்டுபிடிக்கப்படாத காலப்பகுதியிலேயே இவ்வாறானதொரு கருத்து நிலவி வந்தது. மருத்துவத் துறையின் முன்னேற்றத்துடன் குணப்படுத்த முடியாது என்று கருதப்பட்ட பல நோய்களுக்கு மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டன. தொழுநோயும் அவ்வாறே முற்றாக குணப்படுத்தக்கூடிய ஓர் நோயாகும்.**



மைக்கோ பக்றீரியம் லெப்ரே பக்றீரியா.




# அச்சத்தை த

நோய்கள் எம்மை எப்பொழுது தாக்கும் என்று கூறமுடியாது. சூழல் காரணமாகவும் பரம்பரைத் தொடர்புகள் காரணமாகவும் மற்றவர்களிடம் இருந்து தொற்றுவதன் காரணமாகவும் நோய்கள் ஏற்படக் கூடும். தொழுநோயும் அவ்வாறானதொரு நோயாகும்.

## தொழுநோய் என்றால் என்ன?

தொழுநோய் பக்றீரியாவினால் ஏற்படக்கூடியதாகும். இந்த பக்றீரியா 'மைக்கோ பக்றீரியம் லெப்ரே' (Myco bacterium leprae) என்று அழைக்கப்படுகின்றது.

## நீண்டகால வரலாறு

மனித நாகரிகத்தின் ஆரம்பம் முதல் தொழுநோய் இருந்து வந்துள்ளது. உதாரணமாக:

* கி.மு 600 இல் இந்தியாவின் மிகப் பழைமையான ஆயுர்வேத நூலில் இந்த தொழுநோய் போன்ற நோய் அறிகுறிகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.
* மிசரின் பிரமிட்களில் மருந்து பூசி பதப்படுத்தப்பட்டுள்ள சில உடல்களில் தொழுநோய்க்கான அறிகுறிகள் காணப்படுகின்றன.
* யேசுநாதரின் காலப்பகுதியில் இருந்து தொழுநோயாளர்கள் பற்றியும் அவர்களைக் குணப்படுத்தியமை பற்றியும் புனித பைபிளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1860 ஆம் ஆண்டளவிலேயே தொழுநோய்க்கான பக்றீரியா கண்டுபிடிக்கப்பட்டது. நோர்வே நாட்டவரான ஹன்சன் என்பவரே இதைக் கண்டுபிடித்தார். தொழுநோய்க்கு இவ்வகை பக்றீரியாக்கள்தான் காரணம் என்றும் இந்த பக்றீரியாவுக்கு அவர் 'மைக்கோ பக்றீரியம் லெப்ரே' என்றும் பெயரிட்டார்.

## எமது நாட்டிற்கு வந்தது எப்பொழுது?

1701 ஆம் ஆண்டு இலங்கையில் முதன் முதல் தொழுநோய் பற்றி அறியவந்தது. அத்துடன், போர்த்துக்கேயர்களினால் கிழக்காசியாவிலேயே முதல் தொழுநோய் வைத்தியசாலை ஹெந்தலப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டது. தொழுநோயாளர்கள் வாழ்நாள் முழுவதும் ஒதுக்கப்படும் வழக்கம் அக்காலப் பகுதிகளிலும் காணப்பட்டது.

அதே போன்று கி.மு 200 ஆம் ஆண்டளவில் புத்ததாச மன்னன் காலப்பகுதியில் சூனிய வனாந்தரப் பகுதிகளில் குஷ்டரோகத்தால் பாதிக்கப்பட்டவர்கள் ஒதுக்கி வைக்கப்பட்டனர் என்று 'மகாவம்ச' நூலில் குறிப்பிடப்படுகின்றது. அன்று தொழுநோய் 'குஷ்டரோகம்' என்று அழைக்கப்பட்டது.

## நோய் ஏற்படும் விதம்

இது தொற்றும் வகை, தொற்றாத வகை என இரு வகைப்படும். தொற்றாத வகை 'பொசிபெசிலரி' (PB-paucibacillary) என்றும், தொற்றும் வகை மல்ரிபெசிலரி (MB-multibacillary) என்றும் அழைக்கப்படுகின்றது. சிகிச்சை பெறும் நோயாளிகளிடம் இருந்து இந்த நோய் ஒருபோதும் தொற்றுவதில்லை. சிகிச்சை அளிக்கப்படும்போது வழங்கப்படும் பக்றீரியா எதிர்ப்பு மருந்தினால் உடலில் உள்ள இந்த நோய்க்குரிய பக்றீரியாக்கள் 3 நாட்களுக்குள் அழிக்கப்பட்டு விடுவதே இதற்குரிய காரணமாகும். சிகிச்சை பெறாத நோயாளிகளிடம் இருந்தே இந்நோய் பரவக்கூடும்.

## தொற்றுவது எப்படி?

சிகிச்சை பெறாத நோயாளியிடம் இருந்து இருமல், தும்மல் என்பனவற்றின் ஊடாக நோய்க் கிருமிகள் காற்றில் பரவக்கூடும். இந்த நோய்க்கிருமிகளை எதிர்க்கும் உடற்சக்தியைப் பெறாதவர்களுக்கு இந்த நோய் பரவும்.

## தொழு நோய்க்கு எதிரான நோய் எதிர்ப்புச் சக்தி

எந்த வகையான பூகோள நிலையில் வாழ்பவர்களாகட்டும் அவர்களில் 80 சதவீதமானவர்களுக்கு தொழுநோய்க்கு எதிரான நோய் எதிர்ப்புச் சக்தி இருக்கின்றது. அந்தவகையில், சிகிச்சை பெறாத நோயாளிகளிடம் இருந்தே நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்தவர்கள் அல்லது அற்றவர்களுக்கு இது பரவுகின்றது.

## தொழுநோயாளியை இனம் காணுதல்

தொழுநோயாளர்களின் உடலில் திட்டுத்திட்டான அடையாளங்கள் ஏற்படும். அத்துடன், தொழுநோய்க்கு சிகிச்சை பெறாதவர்களே தொழுநோயாளிகள் என்று அடையாளப்படுத்தப்படுகின்றனர்.

## நோயினால் ஏற்படும் பாதிப்புகள்

தொழுநோய் பக்றீரியாக்களினால் சருமத்திற்கும் நரம்புகளுக்கும் பாதிப்புகள் ஏற்படுகின்றன.

## நோய்க்கான அறிகுறிகள்


இளம் சிவப்பு நிறத்திலான வலிகள் அற்ற கட்டிகள் சருமத்தில் ஏற்படுதல் தொழுநோயின் அறிகுறியாகும். இவ்வாறான கட்டிகள் தலையைத் தவிர இதர



நோயாளியின் இருமல், தும்மலினால் நோய் பரவும்



தொழுநோய் கட்டுப்பாட்டு இயக்கத்தின் சின்னம்



தொழுநோய் கட்டி அடையாளங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ாய் பற்றிய


யேசுநாதர் காலத்தில் இருந்த தொழுநோயாளர்கள் பற்றி பைபிளில் குறிப்பிடப்படுகின்றது

பகுதிகளில் காணப்படும். அத்துடன், தோல் கடினத்தன் மையை அடைவதுடன் குறிப்பாக காதுப் பகுதிகளில் உணர்ச்சியற்ற தன்மையும் காணப்படும்.

### தொழுநோய் கட்டிகளின் இயல்புகள்

இக்கட்டிகள் இளம் சிவப்பு, வெண்மை நிறம் கொண்டதாகவோ, தங்க நிறம் மற்றும் பித்தளை நிறத் தினைக் கொண்டதாகவோ இருக் கும். சருமத்திலிருந்து வெளிப்பட்டு தட்டையானதாக இக்கட்டிகள் அமையும். இதில் அரிப்புத் தன்மை காணப்படமாட்டாது. இக்கட்டிகள் எவ்வித உணர்ச்சியும் அற்று இருக்கும். உடலில் சகல பாகத்தி லும் இது ஏற்படக்கூடும்.


### தொழுநோய்க்கான சிகிச்சைகள்

1983 ஆம் ஆண்டிலிருந்து

★ வைத்தியசாலையில் அனுமதிக்கவோ, நோயா ளியை தனிமைப்படுத்தவோ தேவையில்லை.

★ நோய் மிகவும் வரைய றுக்கப்பட்டவர்களையே தாக்கக்கூடும்.

★ நோயாளியுடன் பழகுப வர்களில் 90 சதவீதமான வர்களுக்கு


தொழுநோயிலிருந்து குணமானவரின் கை

# விர்ப்போம்

தொழுநோயைக் கட்டுப்படுத்த வென குறுகிய கால சிகிச்சைக்கான மருந்துகள் பயன்படுத்தப்படு கின்றன. நோயின் தன்மையைப் பொறுத்து சிகிச்சைக்கான காலப் பகுதி தீர்மானிக்கப்படும்.

★ தொற்றாத நோய்க்கு 2 மருந் துகள் உள்ளன. இதனை தொடர்ச்சி யாக 6 மாதங்கள் வரை பயன் படுத்தவேண்டும்.

★ தொற்றும் நோய்க்கு வேறு வகையான மருந்துகள் உள்ளன. சிகிச்சை பெறுவதற்கான காலப்பகுதி 12 மாதங்களாகும்.

இந்த மருந்துகளினால் 90 சதவீத மான நோயாளிகளுக்கு எந்தவித மான பக்கவிளைவுகளும் ஏற்படுவ தில்லை. நோய் அறிகுறி ஏற்பட் டால் மருத்துவ ஆலோசனைகளை பெறுவது போதுமானதாகும். நோய் தொடர்பிலும் அதற்கான சிகிச்சைகள் தொடர்பிலும் எவரும் அச்சமடையத் தேவையில்லை.

### உங்களுக்குத் தெரியுமா?

★ தொழுநோய் குணப்படுத்தக் கூடியதாகும்.

★ தொற்றும் நோயை 12 மாத சிகிச்சைகள் ஊடாகவும் தொற்றாத நோயை 6 மாத சிகிச்சை ஊடாகவும் முற்றாகக் குணப்படுத்த முடியும்.

நோய் பரவமாட்டாது.

★ முதல் அறிகுறி உணர்ச்சி யற்ற கட்டிகளாகும்.

★ முதல் அறிகுறியுடன் சிகிச்சை எடுத்துக்கொண்டால் உடல் விகாரத்தை தவிர்க்கலாம்.

★ தாமதித்து வருபவர் களுக்கு விரல்கள் உணர்ச்சி யற்றுப் போதல், பாதங்கள் உணர்ச்சியற்று இருத்தல் ஆகிய பிரச்சினைகள் ஏற்பட் டாலும் பௌதிக உடற்பயிற்சி களின் ஊடாகவும் சத்திர சிகிச் சைகளின் ஊடாகவும் இவற்றை சரிப்படுத்திக் கொள்ளலாம்.

★ விரல்கள் உணர்ச்சியற்றுப் போதல் தொழுநோயின் அறிகுறி அல்ல.

### உலக தொழுநோய் தினம்

ஒவ் வொரு ஆண்டும் ஒரு குறிப் பிட்ட தினம் தொழுநோய் அனுஷ்டிப்பு தினமாக உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது.


தொழுநோய் பக்றீரியாவைக் கண்டுபிடித்த விஞ்ஞானி ஹன்சன்

நடப்பு வருடத்தில் ஜனவரி 25 ஆம் திகதி இத்தினம் அனுஷ்டிக்கப்பட்டது. அன்றைய தினம் முதல் ஒரு வாரத்திற்கு இதற்கான அனுஷ்டிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.


உரிய சிகிச்சைகள் ஊடாக முற்றாகக் குணப்படுத்தலாம்

---

உலகில் மிகப்பெரிய ராணுவம் உள்ள நாடு சீனா என்பது தெரிந்த விடயம். இரண்டரைக் கோடி பேர் சீன ராணுவத்தில் பணியாற்றி வருகிறார்கள். இவர்களில் 2 கோடி பேர் வரை தரைப்படையிலும் ஏனையோர் கப்பல், விமானம் போன்ற படை களிலும் பணியாற்றி வருகிறார்கள். இதுதான் ''சான்மாக்ப் நோய்'' என்ற நாட்டுக்கும் தனியாக ராணுவம் கிடையாது. எனவே, இதனைப் பாதுகாக்கும் பொறுப்பையும் இத்தாலி ராணுவம்தான் ஏற்றிருக் கிறது. இதன்படி, இத்தாலி நாட்டு ராணுவம் இரண்டு குட்டி நாடு களுக்கும் ராணுவமாக இருந்து உதவிவருகிறது.

ஐரோப்பியன் மெடிட்ரேனியன் ஓரப்பகுதியில் மொனாக்கோ என்ற 1.95 சதுர கிலோமீற்றர்

# ராணுவப்படை இல்லாத நாடுகள்

உலகின் மிகப் பெரிய ராணுவப் படை கொண்ட நாட்டின் கதை. அதே சமயம் ஒரு



சுற்றளவுள்ள ஒரு நாடு உள்ளது. கிக்ப்மால்டி என்ற ராஜகுடும்பம்

ராணுவ வீரர் கூடஇல்லாத நாடுகளும் உலகில் உள்ளன என்பது பலருக்கு தெரியாத விடயம். இதில் முதலிடம்வகிப்பது வத்திக்கான் நாடாகும்.

இங்குள்ள மக்கள் தொகையோ 900 தான். இந்த குட்டி நாடு எப்படி ஒரு ராணுவத்தை வைத்தி ருக்கமுடியும். அப்படியே ராணுவம் இருந்தாலும் இந்த குட்டி ராணுவப்படை யால் பிற நாடுகளுடன் எப்படி போரிட்டு ஜெயிக்க முடியும்? இந்த குட்டி நாட்டை சுற்றி இத்தாலி நாடு உள்ளது. எனவே, வத்திக்கான் நாட்டைப் பாதுகாக்கும் பொறுப்பு இத்தாலிய நாட்டு ராணுவத் திடம் ஒப்படைக்கப்பட் டுள்ளது. வத்திக்கான் மட்டுமல்ல; இத்தாலியின் நடுவில் உள்ள

தான் இந்த நாட்டை ஆண்டு வருகிறது. இந்த நாட்டுக்கும் தனியாக ராணுவம் இல்லாததால் பிரான்ஸ் நாட்டு ராணுவம்தான் இந்த நாட்டின் ராணுவ சேவைகளைப் பூர்த்தி செய்து வருகிறது. ராணுவப்புரட்சி களும் திடீர் திடீர் ஆட்சி மாற்றங் களும் சர்வ சாதாரணமாக இருப்ப தால் ஹெய்ட்டி என்ற நாடு உலக வார்த்தைகளில் அடிக்கடி இடம் பெற்றுவரும் நாடாகும்.

இருப்பினும், இந்த நாட்டுக்கு என்று தனியாக ராணுவ அமைப்புக்கள் கிடையாது. ஏதாவது பிரச்சினைகள் ஏறபட்டால் அங்குள்ள சில அமைப் புக்களை சேர்ந்தவர்கள்தான் ராணுவ வீரர்களாகவும் மாறி நாட்டைக் காப்பாற்றி வருகிறார்கள்.

ஜெ.டிசோகுமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# உலகின் எட்டாவது அதிசயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள 'சிகிரியா' ஓவியங்கள்

**மாத்தளை மாவட்டத்தில் தம்புள்ள பிரதேசத்தில் களமலுவக் கோரளை யில் சிகிரியாக் குன்று அமைந்துள்ளது. இது சுமார் 500 அடி உயரமானது. குன்றின் பல பகுதிகளில் மண் படிகள் காணப்படுகின்றன.சிகிரியா ஓவியங்கள் 'குப்தர்' காலத்திற்குரிய பண்புகளைக் கொண்டுள்ளதுடன் இலங்கைக்கே உரிய தனிப்பண்புகளையும் கொண்டுள்ளன. இவை இலங்கைக்கே உரிய வர்ணங்கள் பாவிக்கப்பட்டு உலகில் சிறந்த கலைப்படைப்பாக புகழப்படுகின்றது.**

இந்த ஓவியங்கள் 1967ஆம் ஆண்டு செப்டெம்பர் 16 இல் சில விஷமிகளால் நாசம் செய்யப்பட்டன. அவற்றை மீண்டும் பழைய பண்புகளுடன் இத்தாலியைச் சேர்ந்த 'கலாநிதி லுசியானோ மரன்சி' திருத்தியமைத்தார். இங்குள்ள ஓவியங்கள் அநேகமானவை 5 ஆம் நூற்றாண்டை சேர்ந்தவையாகும். எனினும், வேறுகாலத்தைசேர்ந்த கலைப் படைப்புகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

சிகிரியா ஓவியங்கள் ஈரமான சாந்தில் அதாவது, 'பிரஸ்கோ புவனோ' முறையில் மிகவும் ஆழமாக வரையப் பட்டுள்ளன. இலங்கையில் பாவிக்கப் பட்ட 'பிரஸ்கோ புவனோ' எனும் ஈரச் சுதை மிகவும் சிறப்பாக தயாரிக்கப்பட்டு நிறங்கள் கலக்கப்பட்டிருப்பதால் இது நீண்ட காலம் நிலைத்துள்ளது. எனினும், சில நிறங்கள் இன்று மங்கிப் போயுள் ளன. இங்கு சிவப்பு, மஞ்சள், பச்சை மண்ணிறங்களில் ஓவியம் வரையப்பட்டுள்ளது. இவை உள்ளூரில் தயாரிக்கப்பட்ட நிறக் கலவைகளாகும். இவை இலங்கைக்கே உரிய தனிப் பண்புகள் கொண்டவையாகும்.



### சிகிரியா ஓவியங்களில் காணப்படும் தனிப்பண்புகள்

- பெண்மையின் வெளிப்பாடு.
- உலகியல் சம்பந்தமானது.ஏனெனில், இலங்கையில் ஏனைய இடங்களில் காணப் படும் ஓவியங்கள். அனேகமானவை சமய சம்பந்தமானவையாகும்.
- கூர்மையான தெளிவான ரேகைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- முப்பரிமாணம் கொண்டவை.
- இந்தியாவில் 'அஜந்தா' ஓவியங்கள் வரையப்பட்ட காலத்தில் 'சிகிரியா' ஓவியங்களும் வரையப்பட்டுள்ளன. எனினும், பல அம்சங்களில் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

சிகிரியா ஓவியங்களை பாதுகாப்பது சம்பந்தமாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித் துள்ள கான் பகதூர் முகமத் சானா என்ப வரின் கூற்றுப்படி சிகிரியா ஓவியங்கள் நீரில் கரைக்கப்பட்ட வர்ணங்களால்தான் வரையப்பட்டுள்ளன.

இந்தியாவில் கௌடில்யனின் 'அர்த்த சாஸ்திரம்' என்ற நூலில் 'வர்ஹாக்' எனும் கட்டட நிர்மாணக்கலையின் பல்வேறு அம்சங்களை சிகிரியாவைச் சுற்றியுள்ள நிர்மாணங்களில் தெளிவாகக் காணக்கூடிய தாக இருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின் றனர். இலங்கை வரலாற்றில் காலத்திற்குக் காலம் பல்வேறு வெளிநாட்டுக் கலையம் சங்களை இலங்கை நிர்மாணங்களில் காணக்கூடியதாக இருக்கின்றது. இந்தியா, சீனா, ஐரோப்பா, அரேபியா நாடுகளில் இருந்து விஜயம் செய்தவர்களின் குறிப்புகள் இதற்கு ஆதாரங்களாக காணப்படுகின்றன.

சிகிரியாவில் 500 இற்கும் மேற் பட்ட ஓவியங்கள் காணப்பட்டதாக சிகிரியா'சுவர்க் கவிதைகள்' கூறு கின்றன. எனினும், இன்று சிகிரியா வில் 22 பெண்களின் ஓவியங் களே காணப்படுகின்றன. இதன் ஒரு பகுதி நீல நிறத்திலும் மறு பகுதி சிவப்பு நிறத்திலும் வரை யப்பட்டுள்ளன. நீல நிறமான பெண்களிடம் ஆபரணங்கள் குறைவாகவும் பொன்னிறமான பெண்கள் அதிகமான ஆபரணங் களை அணிந்தும் காணப்படுகின் றனர். சிகிரியா சுவர்களில் எழுதப்பட்டுள்ள 'குருட்டு கி' எனும் சுவர்க் கவிதைகளில் இந்த ஓவியங் களை ரசித்து பல்வேறு காலங்களில் கவிதைகளை எழுதியுள்ளனர். இங்கு வீணையொன்றுடன் காணப்படும் பெண் பற்றியும் கூறப்பட்டுள்ளது. ஆண் தன்மை வாய்ந்த உருவமைப்பைக் கொண்ட ஓவியம் பற்றியும் கூறப்பட்டுள்ளது. இன்றுள்ள 22 ஓவியங்களில் 19 ஓவியங் களைத்தான் தெளிவாகக் காணமுடிகின்றது.

மலர்ந்துகொண்டிருக்கும் தாமரை மலரை கையில் ஏந்தியுள்ள பெண்ணின் பின்னால் மார்பளவில் மலர்த்தட்டுடன் தோற்றமளிக் கும் இரு பெண்களின் ஓவியம் உள்ளத்தை கவர்ந்திழுக்கும் ஓவியமாகும். இது ரேகை களால் வரைந்து நிறம் தீட்டப்பட்டுள்ளது. அக்காலத்தில் ரேகைகளை திறமையாக வரைவதிலுள்ள ஆற்றலை இந்த ஓவியங்கள் வெளிப்படுத்துகின்றன. மலர்ந் துள்ள தாமரை மலரை வலது கையில் ஏந்தி மேல் நோக்கிய பார்வை யுடன் காணப் படும் ஓவியம் எஞ்சியுள்ள ஓவியங்களில் மிகவும் சிறந்ததாகும்.



இங்குள்ள ஏனைய ஓவியங்களில் வலது கையில் அலரி மலருடன் மாணிக்கக்கல் பதிக்கப் பட்ட ஆபரணங்களுடன் காணப்படும் ஓவியம் முக்கியமான தாகும். இந்த ஓவியம்தான் விஷமி களால் 1867 இல் நாசமாக்கப்பட்ட தாகும். சிகிரியா குகையில் 'நைய் பென' குகையிலும் ஓவியங்கள் காணப்படுகின்றன. இங்கு புத்தர் உருவம் வரையப்பட்டுள்ளது. இவை காசியப்ப மன்னனின் காலத்திற்கு முற்பட்டவை எனக் கருதப்படுகின்றது. சிகிரியா குகையில் ஓவியம் வரைவதற்கு முன்னர் குகையின் சுவர்களை ஈரச்சுதை பூசி பதப்படுத்திய பின்னரே ஓவியம் வரையப்பட் டுள்ளது.

ஐந்தாம் நூற்றாண்டில் சிகிரியா வுக்கு செல்லும் பாதை தற்போது செல்லும் பாதையைவிட வேறுபட்டதாக இருந்திருக்க வேண்டுமென ஆய்வாளர்கள் கருதுகின்றனர். சிகிரியாக் குன்றில் சரிவுப் பாறைகளில் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட சுதை மூலம் பதப்படுத்தப் பட்டு கலைத்தன்மையும் கம்பீரமும் மிக்க குன்றாக சிகரியா மாற்றப்பட்டுள்ளது.

### சிகிரியாவின் புராணம்


அனுராதபுரக் கால மன்னர்களில் காசியப்பனைத் தவிர ஏனைய அனைத்து மன்னர்களும் அனுராதபுரத்தில் இருந்தே ஆட்சி செய்துள்ளனர்.

தாதுசேன மன்னனின் மகளை சேனாதிபதி திருமணம் செய்திருந்தான். மாமி, மருமகள் சண்டையில் சேனாதிபதியின் தாயை அரசன் உயிருடன் எரித்துவிட்டான். இதனால், சேனாதிபதி அரசன் மீது கடும் கோபம் கொண்டான். சிம்மாசனத்தைக் கைப்பற்றத் தருணம் பார்த்திருந்த காசியப் பனுக்கு இது பெருவாய்ப்பாக அமைந்தது. அரசனைப் பிடித்து உயிருடன் மதிலில் கட்டினான் என வரலாறு கூறு கின்றது. முகலனை பிடிக்க எடுத்த முயற்சி வெற்றி பெறவில்லை. அவன் இந்தியாவுக்குத் தப்பிச் சென்றான். அவன் மீண்டும் பெரும் படையுடன் வரக்கூடும் என்ற அச்சத்தால் தலைநகரை அனுராதபுரத்தை விட்டு சிகிரியா வுக்கு மாற்றினான் எனக் கூறப் படுகின்றது. 5 வருடங்கள் கடும் முயற்சி செய்து நிர்மாணித்து சிகிரியாவை தலைநகராக்கினான்.

காசியப்பன் சிகிரியாவை உறு தியான ஒரு கோட்டையாக அமைத்து அனுராதபுரத்தை விட்டு சிகிரியாவை தலைநகராக மாற்றினான். சிகிரியா 500-600 அடிக்கு இடைப்பட்ட குன்றாகும். இக்குன்றின் மீது தனது அரண்மனையை அமைத்தான்.

இன்றைக்கு 1500 ஆண்டு களுக்கு முன்னர் நிர்மாணிக்கப் பட்ட இவை இன்றும் ஒளிவீசும் பளபளப்பான சுவர்களாக இருப்பது உலக மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. இந்த மாபெரும் நிர்மாணம் ஐக்கிய நாடுகள் சபையின் 'யுனெஸ்கோ' நிறுவனத் தீர்மானத்தின்படி எட்டாவது அதிசயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

**எஸ்.எஸ்.எம். மஹ்ரூஃப்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Homerun PAS COLOUR ME COMPETITION

தங்களுக்கு விருப்பமான பெட்டியாக எப்போதும் ஹோம்ரன் பெஸ்டலையே தெரிவுசெய்த உங்களுக்கு, இதோ இப்போது பரிசுகளைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு. அதுவே ஹோம்ரன் Colour Me போட்டி. நீங்கள் செய்ய வேண்டியது, ஹோம்ரன் பெஸ் பக்கெட்டினுள் உள்ள **ஹோம்ரன் சாம்பை** வர்ணம் தீட்டி அனுப்புவது மாத்திரமே. நீங்கள் தீட்டிய ஹோம்ரன் சாம்பின் வர்ணம், எமது சாம்பின் இலக்கமிடப்பட்டுள்ள பகுதியின் வர்ணத்தை ஒத்திருந்தால் ஹோம்ரன் பெஸ் மூலமாக கை நிறையப் பரிசுகள்.

### முதல் மாத சீட்டிழுப்பு

மேலே குறிப்பிடப்பட்ட பகுதிகளில் குறைந்தபட்சம் இரண்டையாவது எமது சித்திரத்தை ஒத்ததாக வர்ணம் தீட்டி அனுப்பும் உங்களுக்கு, முதல் மாதச் சீட்டிழுப்பில் பங்குபற்றும் வாய்ப்புக் கிடைக்கும். **ஒக்டோபர் 15ஆந் திகதி முதல் நொவெம்பர் 15ஆந் திகதி வரை** அனுப்பப்படும் கூப்பன்கள் இந்தப் போட்டிக்குச் சேர்த்துக்கொள்ளப்படும். அதில் தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களில் 500 பேருக்கு பெறுமதியான பரிசுகள் கிடைக்கும்.

### இரண்டாம் மாத சீட்டிழுப்பு

மேலே குறிப்பிடப்பட்ட பகுதிகளில் குறைந்தபட்சம் மூன்றையாவது எமது சித்திரத்தை ஒத்ததாக வர்ணம் தீட்டி அனுப்பும் உங்களுக்கு, இரண்டாம் மாத சீட்டிழுப்பில் பங்குபற்றும் வாய்ப்புக் கிடைக்கும். **நொவெம்பர் 15ஆந் திகதி முதல் டிசெம்பர் 15ஆந் திகதி வரை** அனுப்பி வைக்கப்படும் கூப்பன்கள் இந்தச் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். அதில் தெரிவுசெய்யப்படும் 04 வெற்றியாளர்களுக்கு பைசிக்கிள்களும், மேலும் **இருவருக்கு வரைதல்** உபகரணங்களுடன் பெறுமதியான 400 ஆறுதல் பரிசுகளும் கிடைக்கும்.

### மாபெரும் இறுதிப் போட்டி

சகல பிரிவுகளிலும் எமது சித்திரத்தை ஒத்ததாக வர்ணம் தீட்டி அனுப்பும் உங்களுக்கு, இறுதிச் சீட்டிழுப்பில் பங்குபற்றும் வாய்ப்பு கிடைக்கும். **ஒக்டோபர் 15ஆந் திகதி முதல் ஜனவரி 15ஆந் திகதி வரை** அனுப்பப்படும் சரியான சகல கூப்பன்களும் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும்.

மாபெரும் இறுதிச் சீட்டிழுப்பில் தெரிவுசெய்யப்படும் **முதலாவது வெற்றியாளர் குடும்பத்துடன் (தாய் மற்றும் தந்தை)** மலேசியாவில் வோட்டர் வேர்ள்ட் சுற்றுலா மேற்கொள்வார். மேலும் 10 வெற்றியாளர்களுக்கு பைசிக்கிள்களும் அத்துடன் நான்கு பேருக்கு வரைதல் உபகரணங்களும் இன்னும் 05 பேருக்கு MP3 பிளேயர் மற்றும் பெறுமதியான 400 ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும்.

**மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும் - தொலைபேசி இலக்கங்கள் 011 3 198080, 011 2 925658 அல்லது 0772 398671.**

**ஹோம்ரன் பெஸ் Colour Me வர்ணந்தீட்டும் போட்டி**
**வரையறுக்கப்பட்ட கலர் புரடக்ட்ஸ், இல. 437/4 த.பெ.இல. 10, றாகம வீதி, கடவத்த**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உமர் அலி சைபுதீன் பள்ளிவாசல்

**இணையத்தளம்:** .bn
**தொலைபேசிக் குறியீட்டு இலக்கம்:** +673.
**நாணயம்:** புருனே டொலர்.

# புருனே

**மொழிகள்:** மலாய் (உத்தியோகபூர்வம்), ஆங்கிலம், சீனமொழி.
**இனங்கள்:** மலாயர் 67%, சீனர் 15%, இன்டிஜினஸ் 6%, ஏனையோர் 12%.
**சமயங்கள்:** இஸ்லாம் 67%, பௌத்தம் 13%, கிறிஸ்தவம் 10%, இன்டிஜினஸ் நம்பிக்கையாளர்களும் ஏனையோரும் 10%.

**அரசு:** ஓர் ஆலோசனைக்குழுகொண்ட, கட்சி சார்பற்ற வரம்புடைய முடியரசு.
**தேசிய பெயர்:** நெகரா புருனே தாருஸ்ஸலாம்.
**சுல்தான்** (1967): ஹஸனல் போல்கியா.
**முடிக்குரிய இளவரசர்:** அல்-முஹ்தாதி பில்லா.
**உருவாக்கம்: சுல்தானியம்** - 14 ஆம் நூற்றாண்டு;
**பிரித்தானிய காலனித்துவத்தின் முடிவு**-1984, ஜனவரி முதலாம் திகதி.
**அமைவிடம்:** தென் சீனக் கடலின் போர்னியோ தீவின் வடகடற்பகுதியில், மலேசியாவின் சபாஹ் மற்றும் சரவாக் மாநிலங்களுக்கு இடையில் அமைந்துள்ளது.

## தரைத்தோற்றம்

பெரும்பாலான பகுதிகள் தாழ்நிலங்களாகும். கிழக்குப் பகுதியில் மாத்திரம் உயர்மலைகளைக் காணலாம். பெருந் தொகையான ஆறுகள் பாய்கின்ற புருனே நாட்டில் பிலெய்ட், பண்டாருவன், டியூடொன்க் ஆகிய ஆறுகள் குறிப்பிடத்தக்கன.


புருனே நதிக்கரையிலான படகுப் போக்குவரத்து


Tasek Merimbun ஏரி

**மிக உயர்ந்த மையம்:** புகிட் பாகொன்-6069 அடி (1850மீற்றர்);
**மிகத் தாழ்ந்த மையம்:** தென் சீனக்கடல்.
**நிலப்பிரிவுகள்:** 4 மாவட்டங்கள்.
**மொத்தப் பரப்பு:** 2228 ச.மைல் (5770 ச.கி.மீ);
**நிலப்பரப்பு:** 2035 ச.மைல் (5271 ச.கி.மீ).
**மொத்த சனத்தொகை** (2009): 388190.
**தலைநகரமும் பெரிய நகரமும்:** பண்டார் சேரி பெகாவன்.
**ஏனைய பெரிய நகரங்கள்:** குவாலா பெலெய்ட், சேரியா.


இஸ்தானா நூருல் ஈமான் எனும் அரச மாளிகையில் பிரதான நுழைவாயில்

தேசிய இலச்சினை

**எழுத்தறிவு** (2006): 92.7%.
தேசிய சின்னங்கள்: மலர் -Simpor (ஏனையவை பிரகடனப்படுத்தப்பட வில்லை).

## தேசிய கீதம்

Ya Allah lanjutkanlah Usia
Kebawah Duli Yang Maha Mulia
Adil berdaulat menaungi nusa
Memimpin rakyat kekal bahagia
Hidup sentosa Negara dan Sultan
Ilahi selamatkan Brunei Darussalam என்பதாகும்.

## வரலாறு

6 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் சீனாவுடன் வர்த்தகத் தொடர்பைக்கொண்டிருந்தது. 13 ஆம் நூற்றாண்டு முதல் 15 ஆம் நூற்றாண்டு வரை ஜாவானீஸ் மஜபாஹிட் சாம்ராஜ்யத்தின் விசுவாசம் மிக்க பிரதேசமாக திகழ்ந்தது. 15 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்து சமய தொடர்புகள் ஏற்பட்டன. அதன்பின் மஜபாஹிட் சாம்ராஜ்யம் ஓர் இஸ்லாமிய பேரரசாக வளர்ச்சி அடைந்தது.தொடர்ந்து அங்கு சுதந்திர சுல்தானிய ஆட்சி ஆரம்பமாகியது. 16 ஆம் நூற்றாண்டு முதல் 19 ஆம் நூற்றாண்டு வரை பலம் பொருந்திய வட பகுதியாகிய போர்னியோ ராஜ்யத்தின் மாநிலமாக இருந்தது. 1888 ஆம் ஆண்டில் இருந்து சுதந்திரம் பெறும்வரை பிரித்தானியாவின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தது.




## காலநிலை

மத்தியகோட்டு வெப்பமான காலநிலையைக்கொண்டிருப்பினும், வருடம் முழுவதும் அதிக மழை வீழ்ச்சி கிடைக்கின்றது. வருடாந்த சராசரி வெப்பநிலை 27.1°C ஆகக் காணப்படுகின்றது.

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிரிடக்கூடிய நிலம்: 1%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** நெல், மரக்கறி வகைகள், பழங்கள், கோழி இறைச்சி, நீர் எருமை, முட்டைகள். **தொழிலாளர் தொகை:** 146,300-இதில் வெளிநாட்டு தொழிலாளர்களும் ராணுவ வீரர்களும் உள்ளடங்குகின்றனர். **வேலையற்றோர்** (2006): 4%. **கைத்தொழில்:** பெற்றோலியம், பெற்றோலியச் சுத்திகரிப்பு, திரவ இயற்கை வாயு, கட்டுமானப் பணிகள். **இயற்கை வளங்கள்:** பெற்றோலியம், இயற்கை வாயு, பெறுமதி மிக்க மரங்கள். **ஏற்றுமதிகள்:** மசகு எண்ணெய், இயற்கை வாயு, சுத்திகரிப்பு பொருட்கள், இயந்திரங்கள், போக்குவரத்து சாதனங்கள், உணவு வகை,




ரசாயனப் பொருட்கள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2004): ஜப்பான், தென் கொரியா, அவுஸ்திரேலியா, ஐக்கிய அமெரிக்கா, தாய்லாந்து, இந்தோனேசியா, சீனா, சிங்கப்பூர், மலேசியா, ஐக்கிய ராச்சியம்.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2002): **பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்:** 90,000; **செல்லிடத் தொலைபேசிப் பாவனையாளர்கள்:** 137,000. **வானொலி நிலையங்கள்:** AM 3, FM 10. **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்** (1997): 2. **இணையத்தள வழங்குனர்கள்** (2003): 6409. **இணையத்தளப் பாவனையாளர்கள்** (2002): 35000.

## போக்குவரத்து

**பெருந்தெருக்கள்:** 2525 கி.மீற்றர். **நீர்வழிப்போக்குவரத்து:** 209 கி.மீற்றர். **துறையும் துறைமுகங்களும்:** லுமுட், முவாரா, சேரியா. **விமான நிலையங்கள்:** 2.

## கலாசாரம்

மலே கலாசாரமே பெருமளவில் நிலவுகின்றது. தவிர, இந்துமத ஆதிக்கமும் இருந்ததனால் அதன் தாக்கத்தையும் ஓரளவு காணலாம்.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில....

* **Tasek Merimbun** - 'S' வடிவ கறுப்பு நீருடைய ஏரி. ஆசியாவின் தேசிய முக்கியத்துவம்வாய்ந்த இடமொன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. * **Wasai Wong Kadir நீர்வீழ்ச்சி** உட்பட பல நீர்வீழ்ச்சிகள் உள்ளன.
* **Tamu Seria** - பிரசித்தி பெற்ற சந்தை




மலாய் தொழில்நுட்ப அருங்காட்சியகம்

* **எண்ணெய் மற்றும் இயற்கை வாயு கண்டுபிடிப்பு மத்தியநிலையம்** (OGDC) * **வெள்ளி விழா தோட்டம்** (The Silver Jubilee Park) * **The House of Twelve Roofs** * **புருனே அருங்காட்சியகம்** உட்பட மேலும் பல அருங்காட்சியகங்கள் உள்ளன. * **தேசிய பூங்கா உட்பட ஏராளமான பூங்காக்கள்** காணப்படுகின்றன. * **உமர் அலி சைபுதீன் பள்ளிவாசல்** உட்பட மேலும் பல பள்ளிவாசல் களும் காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வாண்டு நடைபெற்ற தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான வினாத்தாளின் ஒரு பகுதி

## புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் II - 2009

(சென்ற இதழ் தொடர்ச்சி....)

24. இந்நாட்டினுள்ளே பதிவுத் தபால் மூலம் கடிதத்தை அனுப்புவதற்கு குறைந்தபட்சம் எவ்வளவு பெறுமானமுள்ள முத்திரை தேவைப்படும்?
(1) ரூ.20.00 (2) ரூ.25.00 (3) ரூ.30.00 (4) ரூ.35.00

25. வயலின் ஒரு பிரிவிலிருந்து வேறொரு பிரிவுக்கு தண்ணீர் செல்வதற்கு வரம்பில் வெட்டப்பட்டிருக்கும் பாதை;
(1) மடைக்கதவு (2) கலிங்கற் தொட்டி (3) வாய்க்கால் (4) நீரோடை

26. இலங்கையின் உயர்ந்த நிலத்தையும் தாழ்ந்த நிலத்தையும் காட்டும் படத்தில் உயர்ந்த நிலம் தீட்டப்பட்டிருக்கும் நிறம்;
(1) நீல நிறம் (2) கபில நிறம் (3) சிவப்பு நிறம் (4) பச்சை நிறம்

27. இலங்கையில் ஒரே மாகாணத்திலிருந்து இரு பிரதான ஆறுகள் கடலுக்குள்ளே பாய்கின்றன. அவை;
(1) மகாவலி கங்கை, வளவை கங்கை (2) வளவை கங்கை, களனி கங்கை
(3) களனி கங்கை, களுகங்கை (4) கிங் கங்கை, களுகங்கை

28. இலங்கை அரசாங்க இலச்சினையில் நிலைத்திருப்பதைக் குறிப்பது;
(1) தர்ம சக்கரம் (2) நிறைகுடம் (3) பூவிதழ்கள் (4) சூரியனும் சந்திரனும்

29. இலங்கையில் முதன்முதலாக அமைக்கப்பட்ட குளம்;
(1) திசாவாவி (2) கிரித்தலைக்குளம் (3) பசவக்குளம் (4) வவுனிக்குளம்

30. இலங்கைக்கு உன்னத சேவையை ஆற்றியவரும் இப்படத்தில் காணப்படுபவருமான பெரியார் யார்?




(1) சேர் டீ.பீ.ஜயத்திலக்க
(2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி
(3) சேர் பொன்னம்பலம் இராமநாதன்
(4) கலாநிதி ரீ.பீ ஜாயா

31. மின்னல் தாக்கத்தக்க சாத்தியம் கூடுதலாக இருப்பது;
(1) வாகனத்தில் செல்லும்போது (2) திறந்த மைதானத்தில் நிற்கும்போது
(3) பலகை இடப்பட்ட தரையில் நிற்கும்போது (4) தார் வீதியில் செல்லும்போது


32. நாய் கடித்தால் முதலில் செய்ய வேண்டியது;
(1) கடித்த இடத்தில் துணியினால் கட்டுதல்
(2) கடித்த இடத்தை சவர்க்காரமிட்டு சுத்தமான நீரினால் கழுவுதல்
(3) கடித்த இடத்தில் மருந்து பூசுதல்
(4) நோயாளியை மருத்துவரிடம் கொண்டு செல்லல்

33. சூரிய நமஸ்காரப் பயிற்சியின் நான்காம் கட்டத்தைக் காட்டும் உரு யாது?




(1) (2) (3) (4)

34. இவ்வுருவில் உள்ளவாறு வீட்டு முற்றத்தில் சதுரங்கள் வரையப்பட்டு விளையாடும் விளையாட்டு;
(1) சடுகுடு (2) சில்லுக்கோடு
(3) உப்புக்காவுதல் (4) கிட்டியடித்தல்



35. புல்லாங்குழலின் துளைகள் சரியாகக் காணப்படும் உரு யாது?



(1) (2) (3) (4)


36. எரிந்துகொண்டிருக்கும் தணல் உள்ள நெருப்பில் காய்ந்த உப்புக்கட்டியை இடும்போது நடைபெறுவது;
(1) உப்புக்கட்டி உருகுதல் (2) உப்புக்கட்டி சத்தத்துடன் வெடித்தல்
(3) உப்புக்கட்டி எரிதல் (4) தீ அணைந்து போதல்

37. உப்புத்தூள் விரைவாகக் கரைவது;
(1) வெந்நீரில் (2) தண்ணீரில் (3) குளிரூட்டிய நீரில் (4) கொதித்து ஆறிய நீரில்

38. காந்தத் துண்டை நோக்கிக் கவரப்படும் பொருள் சோடி;
(1) பித்தளையும் இரும்பும் (2) அலுமினியமும் பித்தளையும்
(3) இரும்பும் உருக்கும் (4) இரும்பும் அலுமினியமும்

39. பித்தளை மேசைக்கரண்டியில் சிறிதளவு நீரை இட்டு மெழுகுவர்த்திச் சுவாலையில் பிடிக்கும்போது;
(1) நீரின் நிறம் மாறும் (2) நீரின் இயல்பு மாறமாட்டாது
(3) நீர் ஆவியாகும் (4) நீர் உள்ள கரண்டி வெப்பமாகாது

40. இரு உலர் மின்கலங்களை (C), ஒரு மின்குமிழ் (B), ஓர் ஆளி (S) ஆகியன கம்பித் துண்டுகளின் மூலம் பின்வருமாறு தொடுக்கப்பட்டுள்ளன. ஆளியை இடும்போது மின்குமிழ் ஒளிரும் உரு யாது?





(1) (2) (3) (4)

41. இலங்கையின் இரு மாகாணங்களின் பெயர்களை எழுதுக.
(i) .................................... (ii) ....................................

42. காட்டப்பட்டுள்ள இலக்க அட்டைகள் நான்கையும் பயன்படுத்தி ஆக்கத்தக்க மிகப்பெரிய எண் யாது?

| | |
|---|---|
| 6 | 0 |
| 5 | 9 |

....................................


43. 


உருவில் ஒரு விசுக்கோத்துப் பைக்கற்று காணப்படுகின்றது. அதன்;
(i) விளிம்புகளின் எண்ணிக்கை யாது? ....................................
(ii) சதுரமுகங்களின் எண்ணிக்கை யாது? ....................................

44. 9540 உடன் 805 ஐக் கூட்டுக. கூட்டுத்தொகை யாது? ....................................


45. 6045 இலிருந்து 350 ஐக் கழிக்க. வித்தியாசம் யாது? ....................................

46. ஓர் ஆரம்ப பாடசாலைக்குப் பிள்ளைகள் வரும் வாகனங்கள் பற்றிய தகவல்கள் வரைபில் காணப்படுகின்றன.





(i) வானிலும் முச்சக்கர வண்டியிலும் வரும் மாணவர்களின் எண்ணிக்கைகளுக்கிடையே உள்ள வித்தியாசம் யாது? ....................................
(ii) வேறு விதங்களில் வரும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 55 எனக் காணப்பட்டுள்ளது. அந்த எண்ணிக்கையை வரைபில் உரிய நிரலில் குறித்து, நிரலை நிழற்றுக.

47. A, B என்னும் பாத்திரங்களில் இருக்கும் நீர்க் கனவளவுகளுக்கிடையே உள்ள வித்தியாசம் எத்தனை மில்லிலீற்றர்?




....................................ml

48. காட்டப்பட்டுள்ள உருவின் சுற்றளவு யாது?




....................................

49. வழங்கப்பட்டுள்ள சதுரக் கோட்டுப்படம் சம பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதன் மொத்தப் பரப்பளவில் 0.3 பகுதியை நிழற்றுக.



50. ரூ.47.00 விலையுள்ள ஒரு பயிற்சிப் புத்தகத்தையும் ரூ.12.50 விலையுள்ள பேனையையும் வாங்குவதற்கு என்னிடம் ரூ.50.00 உள்ளது. மேலும், எவ்வளவு பணம் தேவைப்படும்? ....................................

51. 420 மாம்பழங்கள் நான்கு பெட்டிகளில் சமமாக அடுக்கப்பட்டன. ஒரு பெட்டியில் உள்ள மாம்பழங்களின் எண்ணிக்கை யாது? ....................................

52. ஒரு போத்தலில் உள்ள நீரின் கனவளவு 750ml ஆகும். இத்தகைய 9 போத்தல்களில் உள்ள நீரின் கனவளவு யாது? ....................................


53. இக்கடிகாரத்தின் முகத்தை அவதானியுங்கள். மணித்தியாலக் கம்பிக்கும் நிமிடக் கம்பிக்கும் இடையே உள்ள கோணம் அடுத்து எவ்வளவு நிமிடத்துக்குப் பின்னர் செங்கோணமாக இருக்கும்?



....................................

54. ஒரு நாடகத்திற்காக நுழைவுச் சீட்டுகளை விற்பதன் மூலம் மோகன் சேகரித்த பணம் ரூ.1525 ஆகும். கண்ணன் சேகரித்த பணம், மோகன் சேகரித்த பணத்திலும் பார்க்க ரூ.175 இனால் கூடியது. கமலா சேகரித்த பணம், மோகன் சேகரித்த பணத்திலும் பார்க்க ரூ.175 இனால் குறைவானது. மூவரும் சேகரித்த மொத்தப் பணம் யாது? ....................................

55. ஒரு பிள்ளை, பாடசாலை மைதானத்தில் புள்ளி A யிலிருந்து ஆரம்பித்து 10m தூரம் கிழக்கு நோக்கியும் அவ்விடத்தில் இருந்து 20m தூரம் தெற்கு நோக்கியும் அவ்விடத்தில் இருந்து 30m தூரம் மேற்கு நோக்கியும் சென்று புள்ளி B யிற்கு வருகின்றது. புள்ளி B யையும் பிள்ளை சென்ற பாதையையும் வழங்கப்பட்டுள்ள சதுரக் கோட்டுப்படத்தில் குறிக்க. உருவில் ஒரு சிறிய சதுரத்தின் ஒவ்வொரு பக்கமும் 10m தூரத்தைக் குறிக்கின்றது எனக் கொள்க.




56. பின்வரும் படச் சட்டங்களைப் பயன்படுத்தி, எதிர்காலத்தில் நடைபெறக்கூடியன என நீர் கருதும் விடயங்களை எழுதுக. உமது கருத்துகளை ஆறு வாக்கியங்களுக்கு மட்டுப்படுத்துக. ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தபட்சம் ஐந்து சொற்களேனும் இடம்பெற வேண்டும். அவ்வாக்கியங்களின் எழுவாய், பயனிலைத் தொடர்புகள் சரியாக இருக்க வேண்டும்.



(i) ....................................
(ii) ....................................
(iii) ....................................
(iv) ....................................
(v) ....................................
(vi) ....................................

புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் II விடைகள் 15ஆம் பக்கத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘கிஸா’வின் பெரி

**இன்று மனிதனால் நிர்மாணிக்கப்படுகின்ற கட்டடங்களில் அனைத்து வகையான உயர் தொழில்நுட்ப முறைகளும் பயன்படுத் தப்படுகின்றன. ஆனால், பல்லாயிரம் வருடங்களுக்கு முன்னர், உலகில் எந்தவிதமான தொழில்நுட்பமும் வளர்ச்சியடையாத கால கட்டத்திலும் எமது முன்னோர்கள் பிரமாண்டமான கட்டடங்களை நிர்மாணித்துள்ளனர். இதற்கு கிஸாவில் அமைந்துள்ள 'பெரிய பிரமிட்' சிறந்த எடுத்துக்காட்டாகும். இது கிஸாவின் பெரிய பிரமிட் (Great Pyramid of Giza) பற்றிய கதையாகும்.**

## அமைவிடம்

எகிப்தில் பண்டைய மெம்பீஸ் எனும் பிரதேசத்தில் இறந்தவர்களின் வாழ்விடம் என்று வர்ணிக்கப்படுகின்ற கிஸா நகரிலேயே இந்த பெரிய பிரமிட் அமைக்கப்பட்டுள்ளது. கிஸா நகரம் இன்றளவில் எகிப்தின் கெய்ரோ மாநகரின் ஒரு பகுதியாக உள்ளது. அத்துடன், இது உல்லாசப் பிரயாணிகளையும் கவர்ந்திழுக்கும் இடமாகவும் பிரசித்தி பெற்றுள்ளது. இந்தப் பெரிய பிரமிட்டுக்கு அருகில் இன்னும் சிறிய பிரமிட்டுக்களும் உள்ளன. இறந்த பாராக்களின் (Pharos) ஆத்மா சாந்தியடைவதற்காக எடுத்துச்செல்லப் பயன்படுத்தப்பட்ட படகு ஒன்றும் காணப்படுகின்றது.

## நிர்மாணம்

கிஸாவின் பெரிய பிரமிட்டானது கி.மு 2560 இல் நிர்மாணிக்கப்பட்டிருக் கலாம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அப்போது எகிப்தை ஆண்ட 'கூஃபு' என்ற பெயருடைய 4 ஆவது அரச வம்சத்தைச் சேர்ந்த அரசனின் ஆட்சிக் காலத்திலேயே இது நிர்மாணிக்கப்பட் டுள்ளது. மன்னன் இறந்த பின்னர், அவரது உடலை பாதுகாத்து வைப்பதற் காகவே இந்த பிரமாண்டமான பிரமிட் நிர்மாணிக் கப்பட்டதாக வரலாறு சான்று பகர்கின்றது.


## பல்லாண்டுகால உழைப்பு

பிரமிட்டை நிர்மாணித்து முடிக்க சுமார் 20 வருடங்கள் எடுத்துள்ளன. இதன் நிர்மாணிப்புக்காக ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கப்பட்டுள்ள கற்தொகுதிகளின் மொத்த எண்ணிக்கை 21 மில்லியனாகும். ஒரு தொகுதியின் நிறை 2 தொன் என கணக்கிடப்பட்டுள்ளது.

## உள்ளமைப்பு

பிரமிட்டுக்குள் நுழைவதற்கான வாயில் வடக்குத் திசையை நோக்கியே அமைந்தி ருக்கின்றது. உள்ளே நுழைந்தவுடன் வராந் தையும் மேடை அமைப்பும் அவசரமாக வெளியேறிச் செல்வதற்கான வாயிலும் காணப்படுகின்றன. அரசவை, பிரமிட்டின் நடுப்பகுதியில் அமைந்துள்ளது. வராந்தை யூடாக அல்லது பெரிய மேடை வழியாக மாத்திரமே அரசவையைச் சென்றடையலாம்.


கூஃபு பாராவின் சிலை


ஆத்மா சாந்தியடைவதற்காக இறந்த உடலை எடுத்துச்செல்லும் படகு

அரசவை உட்புறச்சுவர் சிவப்பு நிறக்கற் களால் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றது. அந்தப் பகுதியின் நடுவில் அரசனின் உடல் பாதுகாப்பாக அடக்கம் செய்யப்பட்டிருக் கின்றது. பிரமிட்டின் நான்கு பக்கங்களும் கருங்கற் கலவையால் மூடப்பட்டுள்ளன.

## சிறப்பான பண்புகள்


இதன் ஒரு பக்கம் 751 அடி நீளமானதாகும். ஒவ்வொரு பக்கமும் 51 பாகை சரிவைக் கொண்டுள்ளது. ஒரு பக்கம் நான்கு திசைகளுக்கும் தெரியக்கூடிய வகையில் அமைந்திருப்பது அதன் முக்கிய சிறப்பம்சமாகும்.

## கற்களால் நிர்மாணிக்கப்பட்டுள்ள உயரமான கட்டடம்

பிரமாண்டமான இந்த பிரமிட்டின் உயரம் 137 மீற்றர் ஆகும். 19 ஆம் நூற்றாண்டு வரை உலகில் கருங்கற்களால் நிர்மாணிக்கப்பட்ட ஒரே கட்டடமாக கிஸாவின் பெரிய பிரமிட்டே திகழ்ந்தது.

## உலகின் மத்தியில் அமைந்துள்ளது

இந்த பிரமிட்டானது எகிப்தின் மத்திய பகுதியில் அமைந்திருப்பதோடு, உலகின் மத்திய பகுதியாகவும் இதுவே கருதப்படு கின்றது. அதாவது, இந்த பிரமிட்டை சரி சமமாகப் பிளக்கும்படி ஒரு கோடு வரைந்தால், அது உலக வரைபடத்தை


கிஸாவின் பெரிய பிரமிட்

**'உயிரிழந்த மன்னர்களின் பாதுகாக்கப்பட்ட உடல்களை செய்வதற்காகவென புராதன எகிப்தில் பிரமிட்டுக் நிர்மாணிக்கப்பட்டன. அக்காலத்தில் அவை கல்லறை மறைப்பதற்கான மேடைகளாகவே கருதப்பட்டன**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரிய பிரமிட்




சம அளவில் இரண்டாகப் பிரிக்கும் வகையில் அமைந்திருக்கும் என்று நம்பப்படுகின்றது.

## பிரமிட் நிர்மாணம்


உயிரிழந்த மன்னர்களின் பாதுகாக்கப்பட்ட உடல்களை அடக்கம் செய்வதற்காகவென புராதன எகிப்தில் பிரமிட்டுக்கள் நிர்மாணிக்கப்பட்டன. அக்காலத்தில் அவை கல்லறைகளை மறைப்பதற்கான மேடைகளாகவே கருதப்பட்டன. ஆரம்பத்தில் அந்த உடலை வைக்க ஒரே ஒரு மேடை மாத்திரமே அமைக்கப்பட்டபோதும், பின்னர் அங்கு பல மேடைகள் அமைக்கப்பட்டிருக்கின்றதையும் அவதானிக்க முடிகின்றது.

புராதன உலகின் ஏழு அதிசயங்களில் கிஸாவின் பெரிய பிரமிட்டும் ஒன்றாகும். எகிப்தின் சுட்டெரிக்கும் பாலைவனப் பகுதியில் இன்றுவரை அது தலைநிமிர்ந்து நிற்கின்றது. அதன் அமைப்பிலும் உறுதியிலும் எந்தவொரு மாறுதல்களும் இதுவரை ஏற்படவில்லை என்பது வியக்க வைக்கின்ற ஒரு விடயமாகும்.

இந்த பிரமிட்டுக்களை நிர்மாணித்த பாராக்கள் (எகிப்திய மன்னர்கள்) தாம் பின்பற்றிய மதத்தின் போதனைகளின்படி, நிலையான வாழ்க்கையை தம்மகம் கொண்டவர்களாக ஆவிகளாக சஞ்சரித்தவாறு பிரமிட்டுக்களை கண்காணித்தபடியே வாழ்கின்றனர் என்று ஒரு சிலர் நம்புகின்றனர்.




















மனித தலையும் சிங்க உடலும் கொண்ட 'ஸ்பின்ஸ்' சிலை



புராதன எகிப்தின் எழுத்து வடிவங்கள்



பிரமிட் நிர்மாணிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட கல் வகை

## பெரிய பிரமிட் குறித்த பல்வேறு கருத்துக்கள்

பிரமிட் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்ட விஞ்ஞானிகள், கட்டடக்கலை நிபுணர்கள், வரலாற்று ஆய்வாளர்கள், புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் போன்றோர் அது குறித்து பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

✸ இது அன்றைய மன்னர்களின் தானியக் களஞ்சியம் என்று ஒரு சிலர் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

✸ இந்த பிரமிட்டின் உட்புற சுவர்களில் காணப்படும் குறிப்புக்கள் எதிர்கால உலகிற்கான எதிர்வு கூறல்களாகும் என்று இன்னும் சிலர் கூறுகின்றனர். அவை உலகின் எழுச்சி, வீழ்ச்சி பற்றி கூறுவதாகவும் கருதப்படுகின்றது.

✸ காணி அளக்கும்போது அதற்கு உதவியாக இது நிர்மாணிக்கப்பட்டிருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது.

இவ்வாறு வெவ்வேறு விதமான கருத்துக்கள் இருந்தாலும், மனிதனின் வியக்கத்தக்க நிர்மாணம் என்று கருதப்படும் பெரிய பிரமிட்டின் பின்னணி மர்மங்கள் பற்றி எதனையும் இதுவரை உறுதியாகக் கூறுவதற்கு எவராலும் முடியவில்லை.

இந்த பிரமிட்டைப் பார்த்த உல்லாசப் பிரயாணி ஒருவர் எழுதிய நூல் ஒன்றில்; 'சூரியன் உதிக்கும்போது சூரிய ஒளியில் மூழ்கும் கிஸாவின் பெரிய பிரமிட்டானது வெள்ளி நிறம் கலந்த சாம்பல் நிறத்தைப் பெறுகின்றது. சூரியன் மறையும் போதான செந்நிற சூரியக் கதிர்கள் படும்போது ஊதா நிறமாகின்றது. இரவில் நிலவின் ஒளியில் அதன் அடியில் இருந்து நுனி வரை வெள்ளி நிறமாகக் காட்சி தருகின்றது. இவ்வாறு ஒவ்வொரு நிலையிலும் கண்கவர் நிறங்களால் காட்சி தருவது அதன் நிர்மாணத்தின் ஆச்சரியமாகும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**அமீர் ஹுசைன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபத்திலும் ஆசை



அஃசன் எனும் ஒரு வணிகன் கடற்கரை நகரங்களுக்குச் சென்று வணிகம் செய்துவந்தான். இதனால், அவன் அடிக்கடி படகில் பயணம் செய்ய வேண்டியிருந்தது.ஒருமுறை அவனைச் சந்தித்த நண்பன் ஒருவன், ''படகில் பயணம் செய்கிறாயே, உனக்கு நீச்சல் தெரியுமா?'' என்று கேட்டான்.

''தெரியாது'' என்றான் அஃசன்.

''நீச்சல் தெரியாமல் இருப்பது ஆபத்து. எனக்குத் தெரிந்த ஒருவர், மூன்றே நாட்களில் நீச்சல் கற்றுத்தந்து விடுவார். நீயும் கற்றுக் கொள்ளலாமே'' என்று கேட்டான்.

''எனக்குப் பணம்தான் முக்கியம். நீச்சல் கற்றுக்கொள்வதற்காக என்னால் மூன்று நாட்களை வீணாக்க முடியாது'' என்றான் அஃசன்.

''அப்படியானால் எப்பொழுதும் படகில் இரண்டு வெற்றுப் பீப்பாய் களை வைத்திரு. படகு கடலில் மூழ்க நேரிட்டால் அந்தப் பீப்பாய்கள் மிதந்து உன்னைக் காப்பாற்றும்''என அறிவுரை கூறிவிட்டுச் சென்றான். நண்பனின் அறிவுரையை ஏற்றுக்கொண்ட அவன் படகில் இரண்டு வெற்றுப் பீப்பாய் களை ஏற்றி வைத்துக்கொண்டான்.

ஒருநாள் அவன் படகு புயலில் சிக்கிக் கடலில் மூழ்கத் தொடங்கியது. தப்பிக்க வழியில்லை. அவன் இரண்டு வெற்றுப் பீப்பாய்களையும் ஒன்றாகச் சேர்த்துக்கட்டி, அதன்மேல் படுத்துக் கொண்டான். ''நடப்பது நடக்கட்டும். உயிர் பிழைக்க வாய்ப்பிருந்தால் அலைகள் என்னைக் கரையில் சேர்க்கட்டும்'' என்று நினைத்தான். திடீரென்று அவனுக்கு ஓர் எண்ணம் தோன்றியது.

''இந்தப் பீப்பாய்கள் காலியாகத் தானே உள்ளன. விலையுயர்ந்த பொருட்களை அவற்றுக்குள் வைத்து விட்டால் நான் பிழைக்கும்போது பயன்படுமே'' என்று நினைத்தான் அஃசன். விரைந்து செயல்பட்ட அவன் பீப்பாய்க்குள் அனைத்துப் பொருட் களையும் வைத்தான். இதனால், பீப்பாய்களின் எடை கூடியது.படகு மூழ்கும் போது அவனுடன் சேர்ந்து பீப்பாய்களும் மூழ்கின.அதிக ஆசை அவனைக் கடலில் மூழ்கடித்தது.

**எம்.ஐ.ஏ.இஃஜாஸ், தரம் - 9D,**
**கமு/அல்-அஸ்றக் தே.பா.,**
**நிந்தவூர்-19.**

# பொன் முட்டை பரிசு

முன்னொரு காலத்தில் மாசிடோனியா நாட்டை இரண்டாம் பிலிப் எனும் சிற்றரசர் ஆண்டுவந்தார். அவர் திடீரென மரண மடைந்ததால், அவருடைய இளைய மகன் அலெக்ஸாண்டர் அரச பதவியை ஏற்றான்.

அலெக்ஸாண்டர் வயதில் மிகவும் சிறியவன்; ஆனால், வீரத்தில் சிறந்தவன். மாசிடோனியா சிற்றர சர்கள் 'பெர்சியம்' எனும் பேரரசருக்குக் கட்டுப் பட்டவர்கள். எனவே, பெர்சியப் பேரரசரான மூன்றாம் டைரஸுக்கு பொன் முட்டைகளைக் கப்பமாகக் கொடுத்து வந்தனர்.



அலெக்ஸாண்டர் பொன் முட்டைகளை அனுப்ப மறுத்திடவே, பெர்சிய மன்னர் தூதுவர் ஒருவரை அனுப்பி காரணம் கேட்டார். அதற்கு அலெக்ஸாண்டர் தூதுவரிடம் 'பொன் முட்டையிடும் பறவை நரகத் திற்கு சென்று விட்டது. டைரஸ் விரும்பினால் அதை நரகத்தில் சந்தித்து பொன் முட்டை களைப் பெறலாம்'' என்று பதில் அனுப்பினான்.




அப்பதிலைப் பெற்ற டைரஸ், அலெக்ஸாண்டருக்கு ஒரு பந்தையும் ஒரு மட்டையையும் அனுப்பி, ''விளையாட்டுச் சிறுவனான உனக்கு, அரசாளும் வயது இன்னும் வரவில்லை'' என்ற செய்தியையும் அனுப்பினான்.

அச்செய்தியைக் கொண்டு வந்தவர்களிடம் அலெக்ஸாண்டர் வீரத்துடன், ''இந்த மட்டையால் டைரஸின் கையில் உள்ள அதிகாரம் என்ற பந்தை வீழ்த்தி விடுவேன்'' எனக் கூறினான்.

அதனால், சினமடைந்த டைரஸ் கசப்பான கனியொன்றை அலெக்ஸாண்டருக்கு அனுப்பி, ''இனி உன் வாழ்நாட்கள் எல்லாம் இந்தக் கனியைப் போல் கசப்பாக இருக்கும்'' என்ற செய்தியை அனுப்பினான். அதைக் கொண்டு வந்த தூதுவரிடம் அலெக்ஸாண்டர் ''உங்கள் அரசரை அக்கனியை உண்ண வைத்து, அக்கனியைப் போன்று அவரது வாழ்நாட்களைக் கசப்பாக்குவேன்'' என்று கூறினான்.

இதைக் கேட்டு மேலும் கடும் சினங்கொண்ட டைரஸ், அலெக்ஸாண்டரின் வீரத்தை அறியாது அவனுடன் போரிட்டு தோல்வியுற்றான். இதனால், டைரஸுக்கு பெருத்த அவமானம் ஏற்பட்டது. பேரரசரான டைரஸின் தோல்வியால் அலெக்ஸாண்டரின் புகழ் எங்கும் பரவியது.

***எம்.எல்.எஃப்.ஹஸ்னா,***
***இ/பாலர் இயேசு கன்னியர் மடம்,***
***தேசிய பாடசாலை, இரத்தினபுரி.***

# அழகு நிலா



*நீல வானில் பவனி வரும்*
*கோல அழகு வெண்ணிலவே*
*உனைக் காணும் போதில்*
*எம் மனம்மிக மகிழுதே!*

*மாதம் ஒருநாள் முழு நிலவாய்*
*மாறி எம்மை மகிழ்விப்பாய்.*
*தேய்ந்து தேய்ந்து போனாலும்*
*திரும்பவும் நிலவாய் வந்திடுவாய்!*

*முற்றத்தில் நாம் மகிழ்ந்திருந்து*
*முழுமையாக உன்னை*
*ரசித்திடுவோம்.*
*அது எமக்கு பெருவிருந்து*
*அதனால் ஒளியைப் பொழிந்திடு!*

*வானில் உன்னைக் காண்கையிலே*
*மனதில் மகிழ்ச்சி தோன்றுதே.*
*அன்றும் மக்கள் அனுபவித்தார்*
*இன்றும் அதுவே தொடர்கிறதே!*

டிலக்ஷி அன்ரனி கிறீசஸ்,
தரம் - 9B, தி/சென்மேரிஸ் கல்.,
திருகோணமலை.

# தெரிந்து கொள்ளுங்கள்

- பாராளுமன்ற ஆட்சிமுறை முதன்முதலில் எங்கு தோன்றியது?
  ***இங்கிலாந்தில்***
- நொபேல் பரிசை கூடுதலான தடவை பெற்ற நாடு எது?
  ***அமெரிக்கா-170 தடவை***
- முதல் ஒலிம்பிக் பந்தயம் எங்கே நடைபெற்றது?
  ***1896 இல் கிரேக் நாட்டில்***
- இந்தியாவில் பூமிக்கடியில் ரயில் ஓடும் நகரம் எது?
  ***கொல்கத்தா***
- உலக நாடுகளில் அதிக சனத்தொகை உள்ள நாடு எது?
  ***சீனா***
- இந்தியாவின் கடைசி மொகலாய மன்னன் யார்?
  ***பக்துர்ஷா***
- உலகிலேயே பெரிய பாலைவனம் எது?
  ***சஹாரா பாலைவனம்***

தொகுப்பு: எம்.எஸ்.எம்.ஸப்னாஸ்,
தரம் - 11B,
க/தெழும்புகஹவத்த மு.வித்.,
அக்குறணை.

# முக்கியமான மூன்று

- மதிக்க வேண்டிய மூன்று: **முதுமை,மார்க்கம், சட்டம்**
- நேசிக்க வேண்டிய மூன்று: **நேர்மை, தூய்மை, கடின உழைப்பு**
- போற்ற வேண்டிய மூன்று: **அறிவு, அழகு, பண்பு**
- பேணி வளர்க்க வேண்டிய மூன்று: **திருப்தி, தைரியம், மனமகிழ்ச்சி.**
- ஆதரிக்க வேண்டிய மூன்று: **வாக்குறுதி, நட்பு, அன்பு**
- ஒழிக்க வேண்டிய மூன்று: **திருட்டு, சோம்பல், பொய்**
- விரும்ப வேண்டிய மூன்று: **கருணை, நற்குணம், மனஅமைதி**
- வெறுக்க வேண்டிய மூன்று: **பெருமை, அநீதி, வாக்குமீறல்.**
- அஞ்சவேண்டிய மூன்று: **களவு, கோள், பொய்**
- எதிர்கொள்ளவேண்டிய மூன்று: **கவலை, மரணம், பயணம்**

பா.மதுவந்தி,
தரம் - 8A,
யா/விக்டோரியாக் கல்.,
சுழிபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் மாணவர் கழகம்


அங்.இல: 3139

ஜே.சாள்ஸ்,
தரம் - 3,
வ.மகா ஊவா த.வித்.,
நுவரெலியா.


அங்.இல: 3140

நா.சஞ்சித்,
தரம் - 6,
விவேகானந்தா கல்.,
கொழும்பு-15.


அங்.இல: 3141

எம்.எம்.உஸ்மான்,
தரம் - 3,
பிரிட்டிஷ் ச.பாட.,
பண்டாரகம.


அங்.இல: 3142

எஸ்.ஏ.சீ.பஸ்லா,
தரம் - 1,
அல்-அஸ்ஹர் ம.கல்.,
திஹாரி.


அங்.இல: 3143

எம்.ஆஸிக்,
தரம் - 9B,
அபுக்காகம மு.ம.வித்.,
நிகவரட்டிய.


அங்.இல: 3144

அஷ்ஃபாக் ஹுசைன்,
தரம் - 7B,
மாலிகாஹேன ம.வித்.,
பேருவளை.


அங்.இல: 3145

நியூமன் டிக்சன்,தரம் - 5,
லூர்து அன்னை
றோ.க.வித்.,
திருகோணமலை.


அங்.இல: 3146

ஆ.சற்குணராஜா,
தரம் - 9B,
லக்கம் த.வித்.,
மஸ்கெலியா.


## புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் II - 2009 விடைகள்

(சென்ற இதழ் தொடர்ச்சி....)

24. (3) 28. (4) 32. (2) 34. (2) 38. (3)
25. (3) 29. (3) 33. (2) 35. (4) 39. (3)
26. (2) 30. (2) 36. (2) 40. (3)
27. (3) 31. (2) 37. (1)








41. 1. Central - மத்திய
2. East - கிழக்கு
3. North - வடக்கு
4. North Central - வட மத்திய
5. North Western - வடமேல்
6. Sabaragamuwa - சப்பரகமுவ
7. Southern - தென்
8. Uva - ஊவா
9. Western - மேல்


42. 9650

43. (i) 12
(ii) 02

44. 10345

45. 5695

46. (i) 15
(ii)




47. 1500ml

48. 20m/20 மீற்றர்

49.



50. ரூபாய் 9 சதம் 50 / ரூ.9.50 / ரூபாய் 9.50 / ரூ.9/50 / 9 ரூபாய் 50 சதம்


51. 105

52. 6750ml/6l 750ml /மில்லி லீற்றர் 6750/மி.லீ.6750
6 லீற்றர் 750 மில்லி லீற்றர் / 6 3/4l/ 6.75l

53. 30

54. ரூபாய் 4575 /ரூ.4575 /4575/= /4575.00/
நாலாயிரத்து ஐந்நூற்று எழுபத்தைந்து ரூபாய்.

55.




56. 1. படச் சட்டங்களைப் பயன்படுத்தி எதிர்காலத்தில் நடைபெறக்கூடியன எனக் கருதப்படும் ஆக்கபூர்வமான வாக்கியங்கள் எழுதப்பட வேண்டும்.
2. எழுவாய்,பயனிலை,இயைபு என்பன திருத்தமானதாக இருத்தல் வேண்டும்.
3. ஒவ்வொரு வாக்கியமும் எழுத்து வழக்கில் இருத்தல் வேண்டும்.
4. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும்.
5. எழுத்துப் பிழைகள் இல்லாதிருத்தல் வேண்டும்.
6. வாக்கியத்தின் கருத்து தெளிவாக இருத்தல் வேண்டும்.
7. வாக்கியங்கள் கூறியது கூறலாக அமையக்கூடாது.

## வாராந்தம் 11 ஆயிரம் ரூபா பெறுமதியான 'வீரோதார' பரிசுகள்




இது, வாராந்தம் 11 ஆயிரம் ரூபா பெறுமதியான 'வீரோதார' உற்பத்தி கல்வி உபகரணங்களை பரிசுகளாக அள்ளித்தரும் 'வீரோதார-விஜய்' குறுக்கெழுத்துப்போட்டி. இவ்வார 'விஜய்'யை வாசிக்கும்போதே இந்த போட்டிக்கான அநேக விடைகளை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களுக்கான பரிசுகளின் விபரம் வருமாறு;

★ **முதலாம் பரிசு**
ரூபா 3,000 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்

★ **இரண்டாம் பரிசு**
ரூபா 2,000 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்

★ **மூன்றாம் பரிசு**
ரூபா 1,000 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்

★ **10 ஆறுதல் பரிசுகள்**
ஒவ்வொருவருக்கும் ரூபா 500 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்.

விடைகளை நிரப்பி-கத்தரித்து-தபாலட்டையில் மாத்திரம் ஒட்டி 18.11.2009 இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி;

**வீரோதார-விஜய்
குறுக்கெழுத்துப் போட்டி இல: 18
'விஜய்',
த.பெ.இல: 2037, கொழும்பு.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1ம | ஞ் | 2ச | ள் | 3ந | தி |
| க | | கோ | | ட் | |
| 4ன் | பு | த | | 5பு | கை |
| | | ர | | | |
| 6க | ட | ன் | | | 7பு |
| தை | | | 8கோ | யி | ல் |

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 16 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்

**முதலாம் பரிசு**
எம்.என்.ஏ.சஹ்னாஸ்,
12, ரேஸ்கோஸ் வீதி,
பதுளை.

**இரண்டாம் பரிசு**
ஜே.கிறேன்ஸி கிளேரி,
41, பஸ் நிலைய வீதி,
காமினிபுர,
ஹட்டன்.

**மூன்றாம் பரிசு**
வி.பாலலோஜனன்,
6 ஆம் வட்டாரம்,
மண்டைதீவு.

### ஆறுதல் பரிசுகள்

பாஹிமா பர்வின்,
22/1, ஸ்டுவர்ட் வீதி,
கொழும்பு-2.

க.துவாரகன்,
புலவர் வீதி,
நவாலி வடக்கு,
மானிப்பாய்.

வஸீம் இக்ராம்,
39, பாடசாலை வீதி,
ஹேனமுல்லை,
பாணந்துறை.

ச.துளக்ஷிகா,
தெஹியோவிட்ட
தோட்டம்,தெஹியோவிட்ட.

எஸ்.சரீபா,
22, உல்பொத்த,
ஹபரனை ரோட்,
கணேவல்பொல,கெக்கிராவ.

ஆர்.பிரசாத்,
104/147, ஒருகொடபுர,
வெல்லம்பிட்டிய.

எம்.ஐ.எம்.முஹஜ்,
805, யட்டிஹேன,
மல்வானை.

பி.நிவேஷ்கர்,
11/2B அகலவத்தை வீதி,
மாத்தளை.

எம்.என்.எப்.நஸ்ரா,
194, பள்ளி வீதி,
நாபாவல, அவிஸாவெல.

பொ.லக்சதீவன்,
49, 2 ஆம் ஒழுங்கை,
பாலவிநாயகர் வீதி,
தவசிக்குளம், வவுனியா.




| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | 3 |
| | | | டி | | |
| 4 | பா | | 5 | | |
| | | | | | |
| | 6 | வ் | 7 | | |
| 8 நெ | | | | | |

பெயர் : ..............................
வீட்டு முகவரி : ..............................
..............................
தொலைபேசி இல : ..............................
பாடசாலை : ..............................
அருகிலுள்ள நகரம் : ..............................
மாவட்டம் : ..............................

### மேலிருந்து கீழ்

01. காசியப்ப மன்னனை நினைவுகூரும் குன்று.
02. ஏழையின் இல்லம். (தலைகீழாக இருக்கிறது)
03. பெரிய காட்டை இப்படிக் கூறுவர்.
06. சிறு தாவரம்.
07. முக்கனிகளில் ஒன்று.

### இடமிருந்து வலம்

01. நோய் வந்தால் பெறவேண்டியது.
04. முல்லைக்கு தேர் கொடுத்த மன்னன். (திரும்பி இருக்கிறது)
05. இது சிறிதானாலும் காரம் பெரிது. (திரும்பி இருக்கிறது)
06. பூமிக்கு அடுத்ததாக உள்ள கிரகம்.
08. துர்நாற்றத்தைக் குறிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காங்கேசன்துறை, தையிட்டியைச் சேர்ந்த டுயிஸ்குமார்-றிலக்ஸ்றிடாமேசி தம்பதியரின் செல்வப் புதல்வன் ஸ்டார் பிறைற்றன், 29.10.2009 அன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை அப்பா, அம்மா உட்பட உறவினர்கள் அனைவரும் குழந்தை யேசுவின் அருள் பெற்று, பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

விஜய் 'விழா உலா'
த.பெ.எண் 2037
கொழும்பு



மதுகம, மலபடயைச் சேர்ந்த செல்வசேகரன்-புவனேஸ்வரி தம்பதியரின் செல்வப் புதல்வி யுவதாரணி, 01.11.2009 அன்று தனது முதலாவது பிறந்ததினத்தைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் அனைவரும் அம்மாபகவான் அருள் பெற்று, பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.




மீசாலையைச் சேர்ந்த குலராசா-விஜயலட்சுமி தம்பதியரின் செல்வப் புதல்வன் சகாயன், 02.11.2009 அன்று தனது மூன்றாவது பிறந்தநாளை வெகுவிமர்சையாகக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் அனைவரும் விநாயகர், முருகப்பெருமான் அருள் பெற்று, சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

# மாதம் ஒரு தலைப்பிலான உங்கள் கைவண்ணங்கள்

## மாம்பழம்



மோ.வியூரிக்கா,
தரம் - $5^{A}$, ஸ்ரீ கோரக்கர் த.ம.வித்.,
சம்மாந்துறை.



றம்சீன் பாத்திமா,
தரம் - $3^{E}$, வ/இ.ம.ம.வித்.,
வவுனியா.



ஹாலித் அஹ்மட்,
தரம் - 3, சாஹிரா தே.பாட.,
அகுறனை.

## நெடுஞ்சாலையில் வாகனங்கள்



ர.ஸ்ரீதர்ஷனி, தரம் - $9^{B}$,
கஹவத்தை நவோதய த.ம.வித்.,
இரத்தினபுரி.

## சிரமதானம்



க.லுஜீவன்,
தரம் - $9^{A}$, இந்து தேசிய கல்.,
மாத்தளை.


## பட்டம்



யே.புவின்சிஹா, தரம் - 4,
இறம்பைக்குளம் ம.ம.வித்.,
வவுனியா.



ஏ.பாசித், தரம் - 01,
அல்-அஸ்ஹர் மு.ம.வித்.,
ஹெம்மாதகம.



ஏ.ஹம்னா, தரம் - 2,
குறிஞ்சிப்பிட்டி மு.ம.வித்.,
கல்முனை.

## கூசா



எம்.எம்.எஃப்.நிஸ்ரினா, தரம் - $8^{G}$,
அல்-அக்ஷா மு.ம.வித்.,
இரத்தினபுரி.



எம்.யசோதனி, தரம் - 7,
அல்-அக்ஸா ம.வித்., குருநாகல்.

## ஆசிரியர்



ஃபாஸிலா நிஹ்மதுல்லாஹ்,
தரம் - $7^{E}$,
பதியுதீன் மஹ்மூத் பெ.கல்.,
கண்டி.



யோ.திருசா, தரம் - 8,
நலன்புரிநிலையப் பாடசாலை,
வவுனியா.




கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



த.விஜய பண்டார,
தரம் - 7,
ராஜகிரிய
றோ.க.த.க.வித்.,
ராஜகிரிய.



லுக்மான், தரம் - $3^{B}$,
அல்-மிஸ்பா ம.வித்.,
சிலாபம்.



ஏ.அக்ஷயா, தரம் - 1,
கிங்ஸ்டன் சர்வதேச கல்.,
கொழும்பு-15.



டி.சத்தியராஜ்,
தரம் - 9,
கம்பஹா த.வித்.,
கம்பஹா.

## மாதம் ஒரு தலைப்பிலான உங்கள் கைவண்ணங்கள்

**முடிவுத்திகதி 18.11.2009**

**ஜனவரி மாதத்துக்கான தலைப்புகள்**

- ★ தரம் 1-5 - எனது வீடு அல்லது ஐஸ் பழம்
- ★ தரம் 6-8 - எனது ஆசிரியர் அல்லது மாட்டு வண்டி
- ★ தரம் 9-11 - மரங்கள் நடுவோம் அல்லது மீன் வியாபாரி

**அன்பார்ந்த தம்பி, தங்கைகளே!**

நாம் கொடுக்கும் தலைப்புகளில் உங்கள் கைவண்ணங்களை விரைவில் அனுப்பி வையுங்கள். தெரிவு செய்யப்படும் கைவண்ணங்கள் இப்பகுதியில் பிரசுரமாகும். எனவே, முயற்சியைக் கைவிடாதீர்கள். அத்துடன் உங்கள் பெயர், தரம், பாடசாலை, கைவண்ணத்தின் தலைப்பு என்பனவற்றை மறக்காமல் எழுதி அனுப்புங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நொவெம்பர் மாதத்தின் சில நிகழ்வுகள்

**நொவெம்பர் 03**



* 1957 - சோவியத் ரஷ்யா 'ஸ்புட்னிக் விண்ஓடத்தில் 'லைக்கா' என்ற நாயை விண் வெளிக்கு முதல் தடவையாக அனுப்பிய நாள்.

**நொவெம்பர் 04**



* 2008 - பராக் ஒபாமா அமெரிக்காவின் முதலாவது கறுப்பின அமெரிக்க ஜனாதிபதியாக தேர்தலின்மூலம் வெற்றி பெற்றமை.

**நொவெம்பர் 05**



* சீனாவின் 'சேங்க்-ஈ-1' என்ற செய்மதி அனுப்பப்பட்ட நாள்.

**நொவெம்பர் 07**

* 1996 நாஸா நிறுவனத்தினால் செவ்வாய் கிரகத்தின் சுற்றுப்புறத்தை ஆராய்வதற்காக விண்ஓடம் அனுப்பப்பட்டது.

**நொவெம்பர் 09**



* 1921 - எல்பர்ட் ஐன்ஸ்டீன் என்பவருக்கு பௌதிகவியலுக்கான 'நொபேல்' பரிசு கிடைக்கப் பெற்ற நாள்.

**நொவெம்பர் 12**



* 1980 - நாஸா நிறுவனத்தின் 'வொயேஜர்-01' சனிக்கிரகத்தை அடைந்து சனிக்கிரகத்தின் வளையத்தை புகைப்படம் எடுத்த நாள்.

**நொவெம்பர் 14**





* 1969 - 'எப்பலோ' மூலம் விண்வெளி வீரர்கள் சந்திரனுக்கு சென்ற இரண்டாவது சந்தர்ப்பம்.

**நொவெம்பர் 15**

* 2007 - பங்களாதேஷில் வீசிய 'ஸிதர்' என்ற பாரிய சூறாவளியின் காரணமாக உலகின் மிக விசாலமான வனமாக கருதப்படுகின்ற 'சுந்தர்கான்' வனம் அழிவுற்றதுடன் ஐயாயிரத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்ட நாள்.

**நொவெம்பர் 16**

UNESCO

* 1945 - யுனெஸ்கோ அமைப்பு ஏற்படுத்தப்பட்ட நாள்.
* 1973 - 'ஸ்கைலெப் 4' விண்ஓடம் மூன்று விண்வெளி வீரர்களுடன் விண்வெளிக்குச் சென்றமை.

**நொவெம்பர் 18**





* 1928 - வோல்ட் டிஸ்னி மற்றும் யுபி இவர்க்ஸ் இயக்கிய 'ஸ்டீம்போர்ட் வில்லி' என்ற கறுப்பு, வெள்ளை கார்ட்டூன் வெளியிடப்பட்ட நாள்.

**நொவெம்பர் 22**





* 1995 - முதல் தடவையாக கணினி மூலம் தயாரிக்கப்பட்ட 'டோய் ஸ்டோரி' திரைப்படம் வெளிவந்த நாள்.

**நொவெம்பர் 23**





* 1963 - பீ.பீ.ஸி நிறுவனத்தின் தயாரிப்பான 'டொக்டர் ஹூ' என்ற டெலி திரைப்படம் முதலாவதாக ஒளிபரப்பாகிய நாள். தற்போதும் ஒளிபரப்பாகின்ற உலகின் மிக நீளமான கதைத்தொடராக இது கருதப்படுகின்றது.

**நொவெம்பர் 24**

* 1964 - நாஸா நிறுவனத்தின் 'மெரினர்' விண்வெளி ஆராய்ச்சித் திட்டத்தின்கீழ் 'மெரினர் 4' செவ்வாய்க்கு அனுப்பப்பட்ட நாள்.

**நொவெம்பர் 25**



* 1867 இல் எல்பிரட் நொபெல் மூலம் 'டைனமைட்' அறிமுகப்படுத்தப்பட்டது.

**நொவெம்பர் 30**




* 1974 - 'லூஸி' என்று பெயரிடப்பட்ட 'ஒஸ்ட்ரோ லொபி திகஸ்' என்ற வானர மனிதனின் எலும்புக்கூடு ஆபிரிக்காவில் கண்டெடுக்கப்பட்டது.






அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...


# ஆப்கான் ஜனாதிபதியாக கார்ஸாயி நியமனம்



ஆப்கானிஸ்தானில் ஜனாதிபதித் தேர்தலையொட்டி நடைபெறவிருந்த இரண்டாம் சுற்று வாக்களிப்பு கைவிடப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டதையடுத்து, அந்நாட்டின் ஜனாதிபதியாக ஹமீட் கர்ஸாயி அறிவிக்கப்பட்டுள்ளார்.

ஹமீட் கர்ஸாயியை எதிர்த்துப் போட்டியிட்ட அப்துல்லா இரண்டாம் சுற்றுத் தேர்தலில் கலந்துகொள்ளாமல் விலகிக் கொண்டதையடுத்தே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. இருப்பினும், தேர்தலின்போது விதிமுறைகளுக்கு மாறான நடவடிக்கைகளின் மூலமே கர்ஸாயி வெற்றி பெற்றுள்ளார் என்ற குற்றச்சாட்டும் எழுந்துள்ளமையினால் இத்தகையதோர் அரசாங்கத்துடனேயே எதிர்காலத்தில் உலக நாடுகள் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகவும் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

# நேபாள அமைச்சரவைக் கூட்டம் 'எவரெஸ்ட்' சிகரத்தில் நடைபெறும்



நேபாளம் நாட்டில் இந்த மாதம் நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தை 'எவரெஸ்ட்' சிகரத்தில் நடத்துவதற்கு அந்நாட்டு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

டிசம்பர் மாதம் டென்மார்க்கின் கொப்பன்ஹேர்கன் நகரில் ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றம் சம்பந்தமான மாநாடு நடத்தப்படவுள்ளமையினால் அம்மாநாட்டின் கவனத்தை ஈர்க்கும்முகமாகவே இவ்வாறான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றத்தின் காரணமாக தமது நாட்டிற்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களை உலகிற்கு தெரியப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டே 'எவரெஸ்ட்' சிகரத்தில் அமைச்சரவைக் கூட்டத்தை நடத்த இருப்பதாகவும் நேபாள அரசாங்கம் தெரிவித்துள்ளது.

8,850 மீற்றர் உயரம் கொண்ட எவரெஸ்ட் சிகரத்தில் 5300 மீற்றர் உயரத்தில் உள்ள ஒரு பகுதியிலேயே இந்த அமைச்சரவைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

# சென்னையில் பட்டம் பறக்கவிடத் தடை!

இந்தியாவின் தமிழ்நாட்டு மாநிலத்தின் சென்னை நகரில் பட்டம் பறக்கவிடுவதற்கு பொலிஸார் தடை விதித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பட்டம் பறக்கவிட்ட சிறுவர்கள் இரண்டு பேர் மேல்மாடியிலிருந்து தவறிக் கீழே விழுந்து மரணமடைந்ததுடன், மற்றுமோர் சம்பவத்தில் மோட்டார் சைக்கிள் ஓட்டிச்சென்ற இரண்டு பேர் காயங்களுக்கு உள்ளாகியமை ஆகிய சம்பவங்களையடுத்தே மேற்படி தடை விதிக்கப்பட்டுள்ளது.பட்டம் விடும் நூலில் போத்தல் கண்ணாடித் துகள்களைத் தடவி பறக்கவிட்டதில் அதில் சிக்குண்டே மோட்டார் சைக்கிள் ஓட்டுனர்கள் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



2006 ஆம் ஆண்டிலும் இதேபோல் சென்னை நகரில், பட்டம் பறக்க விடுவதற்கு தடைவிதிக்கப்பட்டிருந்தமை நினைவுகூரத்தக்கது.

## அற்லஸ் கேள்வி - 229

**கேள்வி:** காலநிலை மாற்றம் தொடர்பான மாநாடு எந்த நாட்டில் நடைபெறவுள்ளது?

**சரியான விடை.........................................**

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே**
**உலகைக் காண்போம், கேள்வி - 229,**
**விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

## போட்டி இல - 227 இன் சரியான விடை: அல்பேனியா

**பரிசு பெறுவோர்**

செல்வராசா ரமணன்,
கலைவாணி வீதி, வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

டி.ஹுசேன்,
2, ஆண்டியகடவத்த, கம்பளை.

இஸ்கி அஹமட்,
72, சேர் ராசிக் பரீட் மாவத்தை, காத்தான்குடி-03.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන்
# ஆயுபோவன்
# வணக்கம்

இன்றைய பாடத்தில் மகள், அம்மா, அண்ணா ஆகியோருக்கு இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

දුව: **අම්මා, හෙට අපේ පාසලේ ශ්‍රමදානයක් තියෙනවා.**
அம்மா, ஹெட அபே பாசலே ஷ்ரமதானயக் தியெனவா.
மகள்: அம்மா, நாளைக்கு எங்கள் பாடசாலையில் சிரமதானம் இருக்கிறது.

**ගෙදරින් කාටහරි එන්න කිව්වා.**
கெதரின் காடஹரி என்ன கிவ்வா.
வீட்டிலிருந்து யாரையாவது வரச் சொன்னார்கள்.

අම්මා: **අයියගෙන් අහල බලන්න.**
அய்யகென் அஹல பலன்ன.
அம்மா: அண்ணாவிடம் கேட்டுப்பாருங்கள்.



දුව: **අයියා කෝ අම්මේ?**
அய்யா கோ அம்மே?
மகள்: அண்ணா எங்கே அம்மா?

අම්මා: **අයියා ළිඳ ළඟ.**
அய்யா லிந்த லங்க.
அம்மா: அண்ணா கிணற்றடியில்.

දුව: **අයියේ, හෙට අපේ පාසලේ ශ්‍රමදානයක්. ගෙදරින් කාටහරි එන්න කිව්වා. ඔයා එනවාද?**
அய்யே, ஹெட அபே பாசலே ஷ்ரமதானயக். கெதரின் காடஹரி என்ன கிவ்வா. ஒயா எனவாத?

மகள்: அண்ணா, நாளைக்கு எங்கள் பாடசாலையில் ஒரு சிரமதானம் இருக்கிறது. வீட்டிலிருந்து யாரையாவது வரச்சொன்னார்கள். நீங்கள் வருவீர்களா?

අයියා: **කීයටද තියෙන්නේ?**
கீயடத தியென்ன?
அண்ணா: எத்தனை மணிக்கு இருக்கிறது?

දුව: **උදේ නවයට විතර ආවොත් ඇති.**
உதே நவயட விதற ஆவொத் எதி.
மகள்: காலை ஒன்பது மணி அளவில் வந்தால் போதும்.

අයියා: **ආ... මම හෙට එන්නම්. අපිත් පාසලට මොනව හරි කරන්න ඕනෙනේ.**
ஆ... மம ஹெட என்னம். அபித் பாசலட மொனவ ஹரி கறன்ன ஓனெனே.
ஆ... நான் நாளைக்கு வருகிறேன். நாங்களும் பாடசாலைக்கு ஏதாவது செய்ய வேண்டும்தானே.

දුව: **හොඳ අයියා. බොහෝම ස්තුතියි.**
ஹொந்த அய்யா. பொஹோம ஸ்தூதிய்.
மகள்: நல்ல அண்ணா. மிகவும் நன்றி.

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

உதா: அண்ணா கிணற்றடியில்.
**අයියා ළිඳ ළඟ.**

i. பாடசாலையில் சிரமதானம் இருக்கிறது.
..................................................................................

ii. எத்தனை மணிக்கு இருக்கிறது?
..................................................................................

iii. நான் நாளைக்கு வருகிறேன்.
..................................................................................






★ **'He, She, It'** முதலான பிரதிப் பெயர்ச்சொற்களை (**Pronouns**) எழுவாய் பகுதியில் கையாண்டு அமைக்கப்படுகின்ற, நிகழ்கால தனி வாக்கியங்களின் 'உடன்பாடு' நிலை வாக்கியங்களை, 'வினா' நிலை வாக்கியங்களாக மாற்றிய மைக்கின்றபோது, அவ்'வினா' வாக்கியங்களில் '**Do**' என்பதற்குப் பதிலாக '**Does**' எனும் நிகழ்கால துணைவினைச்சொல் கையாளப்படுதல் வேண்டும் என்பதை ஞாபகத்தில் கொள்வோம்.

(அ) He goes. (Affirmative)
அவன் போகின்றான். (உடன்பாடு)

(ஆ) Does he go? (Interrogative)
அவன் போகின்றானா? (வினா)
(அவன் போவதுண்டா?)

**குறிப்பு:** இந்த வினா வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள '**Does**' எனும் துணை வினைச் சொல்லுக்குத் தனியான அர்த்தம் கொள்ளப்படுவதில்லை. இங்கே, '**Does**' என்பது உதவிபுரியும் வினைச்சொல்லாக (**Helping Verb**) மாத்திரமே செயற்பட்டுள்ளது என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

(இ) She goes. (Affirmative)
அவள் போகின்றாள். (உடன்பாடு)

(ஈ) Does she go? (Interrogative)
அவள் போகின்றாளா? (வினா)
(அவள் போவதுண்டா?)

---

(உ) It goes. (Affirmative)
அது போகின்றது. (உடன்பாடு)

(ஊ) Does it go? (Interrogative)
அது போகின்றதா? (வினா)
(அது போவதுண்டா?)

★ மேற்படி வாக்கியங்கள், செயற்படுபொருள் (Object) சகிதம் பின்வருமாறு அமைகின்றன;

(அ) He goes to office daily. (Affirmative)
அவன் தினமும் அலுவலகத்திற்குப் போகின்றான். (உடன்பாடு)

(ஆ) Does he go to office daily? (Interrogative)
அவன் தினமும் அலுவலகத்துக்குப் போகின்றானா? (வினா)
(அவன் தினமும் அலுவலகத்துக்குப் போவதுண்டா?

---

(இ) She goes to school daily. (Affirmative)
அவள் தினமும் பாடசாலைக்குப் போகின்றாள். (உடன்பாடு)

(ஈ) Does she go to school daily? (Interrogative)
அவள் தினமும் பாடசாலைக்குப் போகின்றாளா? (வினா)
(அவள் தினமும் பாடசாலைக்குப் போவதுண்டா?

---

(உ) It goes into the garden daily. (Affirmative)
அது தினமும் தோட்டத்தினுள் போகின்றது. (உடன்பாடு)

(ஊ) Does it go into the garden daily? (Interrogative)
அது தினமும் தோட்டத்தினுள் போகின்றதா? (வினா)
(அது தினமும் தோட்டத்தினுள் போவதுண்டா?)

---

**குறிப்பு:** மேற்படி உடன்பாடு வாக்கியங்களில் இடம்பெறுகின்ற '**goes**' எனும் வினைச்சொல், வினா வாக்கியங்களில் '**Does**' சகிதம் பாவனையாகின்றபோது, '**go**' எனும் வினைச்சொல்லாக மாற்றம் பெறுவதையும் இங்கே அவதானிக்க வேண்டும்.

**(தொடரும்)**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எமில்யாவை உயிருடனோ, பிணமாகவோ கொண்டுவர உத்தரவு!



பின்னர் அனுப்பிய அந்தப் பிரபு எமில்யாவின் வீட்டிற்குள் நுழைந்தான். அவன் எமில்யாவுக்கு எது மிகுந்த விருப்பமானது என்று அவனுடைய அண்ணிகளிடம் கேட்டான்.

"அன்பாகப் பேசுவதையே எமில்யா அதிகம் விரும்புவான்'' என்றனர் அவர்கள்.

"அவனிடம் அன்பாக நடந்து சிவப்பு மேற்சட்டையை பரிசளிப்பதாக வாக்களித்தால் நீங்கள் விரும்புகிற எதையும் செய்வான்''

அந்தப் பிரபு தான் கொண்டு வந்திருந்த உலர்ந்த திராட்சை, உலர்ந்த பழங்கள், தேன் பணியாரங்கள் ஆகியவற்றை எமில்யாவுக்குக் கொடுத்துவிட்டுக் கூறினான்;

"எமில்யா, அரசரின் அரண்மனைக்குப் போகலாம். என்னுடன் வருகின்றாயா?''

"இல்லை நான் இங்கே நன்றாகத்தான் இருக்கிறேன்'' என்று எமில்யா பதிலளித்தான்.

"ஓ, எமில்யா அரசர் உனக்கு நல்ல விருந்தளிப்பார். வா நாம் அரண்மனைக்குப் போகலாம்''

"நான் வரமாட்டேன், எனக்கு இதில் விருப்பம் இல்லை'' என்று எமில்யா பதிலளித்தான்.

"ஆனால்... எமில்யா, அரசர் உனக்கு சிவப்பு மேற்சட்டையும் குல்லாவும் ஒரு ஜோடிக் காலணியும் பரிசாக உனக்குத் தருவார்''

எமில்யா இதுபற்றிச் சிந்தித்தான்.

"நல்லது. ஆனால், நீங்கள் மட்டும் தனியாகப் போக வேண்டும். நான் உங்களைப் பின்தொடர்ந்து வருகிறேன்''

பிரபு குதிரையை ஓட்டிக் கொண்டு போனான். எமில்யா சற்று நேரம் சூட்டடுப்புப் பரண் மீது படுத்துவிட்டு, பின்னர் கூறினான்;

"பைக் மீனின்




கட்டளைப்படி, என் விருப்பப்படி நடக்கட்டும். சூட்டடுப்பே அரசருடைய அரண்மனைக்குப் போ''

உடனேயே வீடு பிளக்கவும் கூரை அசையவும் தொடங்கியது. ஒரு பக்கச் சுவர் கீழே விழுந்தது. சூட்டடுப்புப் பரண் தானாகவே தெருவுக்கு வந்து சாலை வழியே அரசரின் அரண்மனையை நோக்கிச் சென்றது.

**அரண்மனையில் கண்ணீரும் கம்பலையுமாக இருந்தது. இளவரசி மாரியாவின் கண்கள் எமில்யாவைக் காண ஏங்கின**

அரண்மனையில் இருந்து சாளரம் வழியே பார்த்த அரசர் அதிசயித்துப் போனார். "என்ன அது?''எனக் கேட்டார்.

பிரபு பதிலளித்தான்;

"எமில்யா தனது சூட்டடுப்பின் மீது அமர்ந்து கொண்டு தங்களது அரண்மனைக்கு வந்து கொண்டிருக்கிறான்''

அரசர் வெளிமுற்றத்திற்கு வந்தார். அந்த நேரத்தில் அரசரின் மகள் இளவரசி மாரியா ஜன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள். அவளைப் பார்த்ததும் எமில்யா சிறிய குரலில் கூறினான்;

"பைக் மீனின் கட்டளைப்படி, என் விருப்பப்படி நடக்கட்டும்! அரசருடைய மகள் என்னை விரும்பட்டும்.... சூட்டடுப்பே, வீட்டுக்குப் போ'' என மேலும் கூறினான்.

சூட்டடுப்பு திரும்பி எமில்யாவினுடைய கிராமத்தை நோக்கிச் சென்றது. அது அவனுடைய வீட்டிற்குள்ளாக நுழைந்து தனது பழைய இடத்தைத் திரும்பவும் சென்றடைந்தது.எமில்யாவும் முன்னர் போல் சூட்டடுப்புப் பரண் மீது படுத்துக்கொண்டான்.

இதற்கிடையே, அரண்மனையில் கண்ணீரும் கம்பலையுமாக இருந்தது. இளவரசி மாரியாவின் கண்கள் எமில்யாவைக் காண ஏங்கின. அவன் இல்லாமல் தன்னால் வாழ முடியாது என்று தன் தந்தையிடம் கூறி, அவனை மணந்துகொள்ள அனுமதிக்குமாறு அவரிடம் மன்றாடினாள். அரசர் பெரிதும் குழப்பமுற்று மூத்த பிரபுவிடம் கூறினார்;

"நீ சென்று எமில்யாவை பிணமாகவோ, உயிருடனோ இங்கே கொண்டு வா இல்லாதுவிடின் உன் தலையைச் சீவிவிடுவேன்''

மூத்த பிரபு பலவகையான நல்ல ருசியுள்ள பொருட்களும் இனிப்பு ஒயின்களும் வாங்கிக்கொண்டு எமில்யாவினுடைய கிராமத்திற்குத் திரும்பவும் புறப்பட்டான். அதே வீட்டிற்குள்ளாக வந்து எமில்யாவுக்கு ராஜரீகமான முறையில் விருந்து படைக்கத் தொடங்கினான்.

இனிய உணவையும் ஒயினையும் எமில்யா வயிறு முட்ட உண்டான். சிறிது நேரத்தில் அவனது தலை ஆட்டங்காணவே கீழே படுத்து நன்கு தூங்கிவிட்டான்.உடனே அவனை வண்டிக்குள் தூக்கிப் போட்டுக்கொண்டு அரண்மனையை நோக்கிச் சென்றான் அந்தப் பிரபு.

(தொடரும்...)

# தந்திரம் பலிக்கவில்லை

ஓர் ஊரில் உப்பு வியாபாரி ஒருவன் இருந்தான். அவன் கழுதையின் முதுகில் உப்பு மூடைகளை ஏற்றிக்கொண்டு ஆற்றைக் கடந்தபோது எதிர்பாராமல் கழுதையின் கால்கள் வழுக்கிவிட்டன. இதனால், கழுதை தடுமாறி ஆற்றுக்குள் விழுந்துவிட்டது. அதன் முதுகில் இருந்த உப்பு மூடையும் நன்றாக நனைந்துவிட்டது. உடனே கழுதையை வியாபாரி மெல்லத் தூக்கிவிட்டான். ஆனால், கழுதையுடன் உப்பு நீரில் மூழ்கியதால் உப்பு மூடை கரைந்து பாதி மூடையாகிவிட்டது. வியாபாரியும் உப்பு வியாபாரம் செய்ய வழியில்லாமல் கழுதையை ஓட்டிக்கொண்டு வீட்டிற்குத் திரும்பினான்.

மறுநாளும் வழக்கம்போல் வியாபாரி உப்பு வியாபாரத்திற்கு கிளம்பினான். கழுதைக்கு முந்தைய நாள் நினைவு வந்தது. உடனே மெல்லத் தடுமாறுவது போல பாவனை



செய்து சட்டென்று ஆற்றுக்குள் விழுந்துவிட்டது. கழுதை தந்திரமாக தொடர்ந்து இதனை செய்து வந்தது. இதனால், தினமும் வியாபாரத்திற்குப் போகமுடியாமல் வியாபாரி மிகவும் சிரமப்பட்டான். அத்துடன், அவனுக்கு மெல்ல மெல்ல கழுதையின் தந்திரமும் புரிய ஆரம்பித்தது. விரைவாக அதற்கு ஒரு நல்ல பாடம் கற்பிக்க நினைத்தான்.

அன்று வியாபாரி, கடற்பஞ்சு நிறைந்த ஒரு சாக்கு மூடையை கழுதையின் முதுகில் ஏற்றினான். கழுதை வழக்கம்போல ஆற்றின் பாலத்திற்கு அருகே வந்தது. எதிர்பாராமல் கால் தடுமாறுவது போல தடுமாறி ஆற்றிற்குள் விழுந்தது.

இதனால், மூடையில் இருந்த பஞ்சு நீரில் நனைந்தது. ஐயோ பாவம் கழுதை அதன் முதுகில் இருந்த பஞ்சு மூடை முன்பைவிட அதிகமாகக் கனத்தது. கடற்பஞ்சு நீரை உறிஞ்சிக் கொள்ளும் தன்மை உடையதால் சாக்கு மூடை முன்பைவிட அதிகமாகக் கனத்தது. அதிகமான கனத்துடன் நீரில் நனைந்த கடற்பஞ்சு மூடையை சுமக்க முடியாமல் சுமந்தது கழுதை. அன்று முதல் கழுதை ஆற்றைக் கடக்கும்போது மிகவும் நிதானமாகக் கடந்து சென்றது.

வியாபாரி, தான் கழுதைக்குப் புகட்டிய பாடம் நல்ல பலன் தந்ததை எண்ணி மகிழ்ந்தான். இதிலிருந்து நாம் அடாவடியாக நடந்து பிறரை ஏமாற்ற நினைத்தால் அதற்கான பலனாக பெரிய துன்பங்களை சந்திக்க வேண்டிவரும் இதுவே உண்மை என்பது இதன்மூலம் புரிகிறதல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருடத்தின் சிறந்த வீரர்

# திலகரட்ன தில்ஷான்



சிறந்த வீரர் திலகரட்ன தில்ஷான்

இலங்கை கிரிக்கெட் சபையினால் கிரிக்கெட் போட்டியாளர்களை ஊக்குவிக்கு முகமாக விருது வழங்கும் விழாவொன்று பத்தரமுல்லையில் நடைபெற்றது.

இவ்விருது விழாவில் வருடத்தின் சிறந்த கிரிக்கெட் வீரர், சிறந்த ஒருநாள் போட்டி வீரர், ஜனரஞ்சக வீரர் ஆகிய மூன்று விருதுகளையும் இலங்கை அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் திலகரட்ன தில்ஷான் சுவீகரித்துக் கொண்டமை சிறப்பான ஓர் அம்சமாக இருந்தது.

வீர, வீராங்கனைகள் 100 பேருக்கு இந்த விழாவில் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகள் இரண்டிலும் சிறந்த பந்து வீச்சாளராக நுவன் குலசேக்கர தெரிவாகியிருந்தார். வருடத்தின் வளர்ந்து வரும் வீரராகவும் சகலதுறை ஆட்டக்காரராகவும் என்ஜலோ மெத்யூஸ் விருது பெற்றார்.

மேற்படி, விருது விழாவிற்கான அனுசரணையை 'சியெட் ஸ்ரீலங்கா நிறுவனம்' வழங்கியிருந்தது.



சிறந்த பந்து வீச்சு வீராங்கனை ஸ்வினி டி அல்வில்



நுவன் குலசேக்கர, என்ஜலோ மெத்யூஸ் ஆகியோர் பிரமோத்ய விடமிருந்து விருது பெறுகின்றனர்.

# ஹுசேன் போல்ட் கிரிக்கெட் போட்டியில்

உலகின் மிக வேகமான ஓட்ட வீரர் என்ற பெருமையை கொண்டுள்ள ஜெமெய்க்கா நாட்டின் ஹுசேன் போல்ட் அண்மையில் கிரிக்கெட் போட்டியொன்றில் போட்டியிட்டு ரசிகர்களை குதூகலப் படுத்தியுள்ளார்.

ஜெமெய்க்காவின் கிங்ஸ்டன் நகருக்கு அருகாமையில் உள்ள 'கெய்ஸர்' என்ற விளையாட்டுக் கழகத்திற்கு உரித்துடைய மைதானமொன்றில் நடைபெற்ற போட்டியிலேயே ஹுசேன் போல்ட் கலந்து கொண்டார். 'டிரெலெவனி' என்ற





அணியின் சார்பாகவே ஹுசேன் போல்ட் போட்டியிட்டதுடன், அவரது எதிரணிக்கு தலைமை தாங்கியவர் மேற்கிந்திய தீவுகளின் கிறிஸ்கேல் ஆகும்.

இப்போட்டியின்போது சகல துறையிலும் ஹுசேன் போல்ட் மிளிர்ந்த போதிலும் அவரது அணி 2 விக்கெட்களினால் தோல்வி அடைந்தமையும் குறிப்பிடத்தக்கது.

துடுப்பாட்டத்தின்போது வேகமாக 11 ஓட்டங்களைப் பெற்ற போல்ட் பந்து வீச்சிலும் 2 விக்கெட்களை கைப்பற்றியிருந்தார். 11 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ஓட்டமெடுப்பின்போதே போல்ட் ஆட்டமிழந்தார். இப்போட்டியை கண்டுகளிக்க பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட ரசிகர்கள் வருகை தந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# 19 வயதிற்கு உட்பட்டோருக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள்

19 வயதிற்கு உட்பட்டவர்களுக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் அடுத்த வருடம் ஜனவரி மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமாகி 30 ஆம் திகதி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 16 நாடுகள் பங்குபற்றவுள்ள மேற்படி போட்டி நான்கு பிரிவுகளின் கீழ் நடைபெறவுள்ளன.

A, B, C, D என பிரிக்கப்பட்டுள்ள நான்கு பிரிவுகளில் 'லீக்' போட்டிகள் நடைபெறும். இப்போட்டிகளில் முதல் இரண்டு இடங்களைப் பெறுகின்ற அணிகள் காலிறுதிப் போட்டிக்குத் தகுதிப்பெற்று, அதிலும் வெற்றி பெறுகின்ற நான்கு அணிகள் அரையிறுதிக்குத் தெரிவாகும். அரையிறுதியில் வெற்றி பெறும் அணிகள் இறுதிப் போட்டியில் பங்குபெறும். குறித்த பிரிவுகளுள் அடங்குகின்ற அணிகள் வருமாறு;

A பிரிவில் - இந்தியா, இங்கிலாந்து, ஹொங்கொங்,ஆப்கானிஸ்தான்.
B பிரிவில் - அவுஸ்திரேலியா, தென்ஆபிரிக்கா, அயர்லாந்து, அமெரிக்கா.
C பிரிவில் - இலங்கை, நியூஸிலாந்து, சிம்பாப்வே, கெனடா.
D பிரிவில் - பாகிஸ்தான், பங்களாதேஷ், மேற்கிந்தியத் தீவுகள், பப்புவா நியூகினியா.

# இந்திய-பாகிஸ்தான் போட்டிகள் அமெரிக்காவில்



பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு நடத்தப்படாமல் உள்ள இந்திய பாகிஸ்தான் கிரிக்கெட் தொடரை அமெரிக்காவில் நடத்தினால் நன்றாக இருக்கும் என்று இந்திய அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ள கருத்தினை பாகிஸ்தான் முன்னாள் வீரர் ஜாவிட் மியன்டாட்டும் வரவேற்றுள்ளார்.

இதுகுறித்து கருத்துத் தெரிவித்துள்ள மியன்டாட், ''அமெரிக்காவில் இந்தியா-பாகிஸ்தான் பரம்பரையினர் ஏராளமானோர் உள்ளனர். ஆகையால், அங்கு மேற்படி கிரிக்கெட் போட்டியை நடத்தினால் அதிகமானோர் போட்டியைக் கண்டுகளிக்க வருவார்கள். மேலும், இவ்வாறு இந்தப் போட்டியை நடத்துவதற்கு இந்திய, பாகிஸ்தான் முன்னாள் வீரர்களான கவஸ்கார், இம்ரான்கான் போன்றவர்கள் தம்மால் இயன்ற முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், கிரிக்கெட்டில் அரசியல் கலக்கப்படக்கூடாது. அந்தவகையில், இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கிடையே போட்டிகளை நடத்துவதில் இருநாட்டுத் தலைவர்களும் ஆர்வம் காட்டுவார்கள் என்று எதிர்பார்க்கின்றேன்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

DELHI 2010
XIX COMMONWEALTH GAMES

# அணிசாரா நாடுகளின் விளையாட்டுப் போட்டிகள்

அணிசாரா நாடுகளின் விளையாட்டுப் போட்டிகள் அடுத்த வருடம் இந்தியாவில் நடைபெறவுள்ளதையிட்டு, அதனை முன்னிட்ட சுடரை ஏந்தி ஓடுதல் நிகழ்வு கடந்த வாரம் ஆரம்பமாகியது.

லண்டனில் நடைபெற்ற மேற்படி நிகழ்வின்போது குறித்த விளையாட்டுக்குரிய சுடர் விளக்கினை இங்கிலாந்தின் இரண்டாவது எலிஸபெத் மகாராணியார் இந்திய ஜனாதிபதி பிரதீபா பட்டீலிடம் கையளித்தார். இப்போட்டிகள் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ளது.

19 ஆவது அணிசேரா நாடுகளின் விளையாட்டுப் போட்டிகள் ஒக்டோபர் 3 ஆம் திகதி ஆரம்பமாகி 14 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது இந்த போட்டிகளில் 'கொமன்வெல்த்' எனப்படும் அணிசாரா நாடுகள் 9 பங்குபற்றும். இந்திய ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்ட இந்த சுடர் 71 நாடுகளினூடே தரை வழியாகவும் வான் வழியாகவும் 1 லட்சத்து 20 ஆயிரம் கி.மீற்றர் தூரம் வரை கடந்து இந்தியாவை வந்தடைந்து போட்டிகள் நடைபெறும் நேரு மைதானத்தில் ஏற்றப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் அனைவருக்கும் 'விஜய்' பத்திரிகை வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றது

## 2009, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



க/ஸாஹிரா ஆண்கள் கல்லூரியில் கல்வி பயிலும் எம்.ஆர்.எம்.இஷாட், 156 புள்ளிகளுடன் பாடசாலையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவராக திகழ்கின்றார். இவர், எம்.ரம்ஸான்-எஃப்.நஃபாஸா தம்பதியரின் புதல்வர் ஆவார்.



க/ஸாஹிரா ஆண்கள் கல்லூரியில் கல்வி கற்கும் எம்.ஜே.எம்.எம்.ரிஸ்கான், 153 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எம்.இர்ஷான்-ருவிஸா தம்பதியரின் புதல்வர் ஆவார்.



க/ஸாஹிரா ஆண்கள் கல்லூரியில் கல்வி கற்கும் எம்.ஆர்.எம்.இன்ஷாஃப், 149 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எம்.ராஸிக்-ஃபரீனா தம்பதியரின் புதல்வர் ஆவார்.



க/ஸாஹிரா ஆண்கள் கல்லூரியில் கல்வி பயிலும் எம்.இஸட்.ஸாலிக் அஹமட், 148 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.இவர், எம்.ஸரூக்-எஃப்.ஃபர்ஸானா தம்பதியரின் புதல்வர் ஆவார்.



க/ஸாஹிரா ஆண்கள் கல்லூரியில் கல்வி பயிலும் எம்.எம்.எம். ஆதில், 145 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மாலிக்-சி.ஃபரூஹா தம்பதியரின் புதல்வர் ஆவார்.



பு/மதவாக்குளம் மு.ம வித்தியாலயத்திலிருந்து 8 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். (முன்வரிசை-இடமிருந்து வலமாக) எம்.ஆர்.நுஸ்ஹா, எம்.ஆர்.றிஸ்லா பர்வின், ஏ.அஸ்னா, ஏ.என்.இஷ்ரா பர்வின், ஐ.ஷஸ்னா, எம்.ஆர்.நிஹ்லா, (பின்வரிசை-இடமிருந்து வலமாக) எம்.ஏ.அஸ்ரான், ஐ.மொஹமட் (உப அதிபர்), ஐ.எம்.பஷீர் (அதிபர்), எம்.ஆர்.பஸ்ஹான் ஆகியோருடன் வகுப்பாசிரியைகளான எம்.ஐ.யூ.றிஸ்மியா, ஐ.எல்.யூ.சுஹைறா ஆகியோரும் நிற்பதையே படத்தில் காண்கிறீர்கள்.

# மின்சாரத்தை சேமிப்போம்; லட்சக்கணக்கில் பணப்பரிசு வெல்வோம்!

'விஜய்' பத்திரிகையும் நிலைபெறுதகு வலு அதிகாரசபையும் ஒன்றிணைந்து நடத்துகின்ற 'மின்சாரத்தை சேமிப்போம்' எனும் தொனிப்பொருளிலான மின்பட்டியல் கட்டணத்தை குறைத்துக் காட்டும் போட்டி தொடர்பான தரவுப்படிவமொன்று கடந்த 05.08.2009 ஆம் திகதியன்று 'விஜய்'யில் பிரசுரமாகியிருந்தது. குறித்த திகதிக்குரிய பத்திரிகையைப் பெறத்தவறியவர்களைக் கருத்திற்கொண்டு மேற்படி தரவுப்படிவம் மீண்டும் வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஓகஸ்ட், செப்டெம்பர், ஒக்டோபர் ஆகிய மாதங்களில் உங்கள் வீடுகளில் மின்பாவனை குறைக்கப்பட்டுள்ளதை எடுத்துக்காட்டும் விதமாக குறித்த தரவுகளை நீங்கள் நிரப்பவேண்டும். குறித்த மாதங்களுக்குரிய உங்களது மின்கட்டளைப் பட்டியலில் காட்டப்படுகின்ற மின்அலகுப் பாவனையைக் கொண்டு இதனை நிரப்பமுடியும். (உதாரணம் காட்டப்பட்டுள்ளது)

இதன்படி, கூடிய சதவீதம் மின்கட்டணத்தை குறைத்துக்கொண்டவர்களுக்கு குறிக்கப்பட்டுள்ள பணப்பரிசுகள் வழங்கப்படும். அனுப்ப வேண்டிய இறுதித் திகதி 30.11.2009

நிலைபெறுதகு வலு அதிகாரசபை

விஜய்

### மின் பட்டியல் தரவுக் குறியீட்டுப் பத்திரம்

மின் பட்டியல் உரிமையாளரின் பெயர் : ..............................
..............................
முகவரி : ..............................
..............................

மின் பட்டியல் கணக்கு இலக்கம்: ☐☐☐☐☐☐☐☐☐☐

குறித்த பிரதேச மின் பொறியியலாளர் அலுவலகம்.

| மாதம் | திகதி | மானிவாசிப்பு (kWh) | மாதாந்த மின் அலகு |
|---|---|---|---|
| ஓகஸ்ட் | | ☐☐☐☐☐☐ | ☐☐☐☐ |
| செப்டெம்பர் | | ☐☐☐☐☐☐ | ☐☐☐☐ |
| ஒக்டோபர் | | ☐☐☐☐☐☐ | ☐☐☐☐ |

மின்மானியில் வாசிப்பு 6 இலக்கங்களால் குறிக்கப்படுவதோடு, வலது பக்க இறுதி இலக்கத்தால் குறிப்பிடப்படுவது தசம தானத்தின் இறுதியாகும். அது உதாரணத்துக்கு பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருக்கும்.

| மாதம் | திகதி | மானிவாசிப்பு (kWh) | மாதாந்த மின் அலகுகள் |
|---|---|---|---|
| ஏப்ரல் | 30 | 28263.5 | 111.1 |
| மே | 31 | 58374.6 | |

### மாணவரின் சொந்த விபரம்

பெயர்: ..............................

முகவரி: ..............................
..............................

பாடசாலை: ..............................

தரம்/வகுப்பு: ..............................

தொலைபேசி இல: ..............................

- ★ முதலாம் பரிசு - ரூ.150,000
- ★ இரண்டாம் பரிசு - ரூ.100,000
- ★ மூன்றாம் பரிசு - ரூ.50,000
- ★ ரூ.10,000 வீதம் 12 ஆறுதல் பரிசுகள். மூன்று மாதங்களுக்கு மின்சாரத்தை குறைந்த அளவில் பாவித்த 500 பேருக்கு பெறுமதி வாய்ந்த சான்றிதழ்கள்.

### மின்பாவனையை குறைத்துக்கொள்வதற்கு கையாண்ட வழிமுறைகள்

ஓகஸ்ட்: ..............................
..............................
..............................

செப்டெம்பர்: ..............................
..............................
..............................

ஒக்டோபர்: ..............................
..............................

இப்படிவம் போதவில்லையாயின், வேறொரு தாளில் எழுதி இணையுங்கள்.

விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி:
மின்மானியை வாசிப்போம்,
'விஜய்',
த.பெ இலக்கம்: 2037, கொழும்பு-02.

மேலதிக விபரங்களுக்கு;
நிலைபெறுதகு வலு அதிகாரசபை,
3G-17, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம்,
பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு-07.

தூர நோக்குவோம் - ஒன்றிணைவோம்
மின்சாரத்தை சேமிப்போம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்களுக்குத் தெரியுமா? 3

இது ஆசியக் கண்டத்தில் உள்ள ஒரு நாடாகும். இஸ்லாமிய கூட்டாட்சி நிலவுகின்ற ஒரு குடியரசு நாடு. இஸ்லாமாபாத், இதன் தலைநகராக விளங்குகின்றது. 1947 ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து பிரிந்து, அதே ஆண்டு ஒகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரத்தை பெற்றுக்கொண்டது. 1956 மார்ச் மாதம் 23 ஆம் திகதி குடியரசானது. முஸ்லிம்களைப் பெரும்பான்மையினராகக்கொண்ட ஒரு நாடாகும். உத்தியோகபூர்வ மொழிகளாக உருது, ஆங்கிலம் என்பன பயன்பாட்டில் உள்ளன. இந்த நாட்டின் பெயரை எழுதி, அருகிலுள்ள வரைபடங்களில் சரியானதில் X அடையாளமிடுக.

✱ நாட்டின் பெயர் - ..........................................








## அழகாக நிறம் தீட்டுவோம் 2



## 4

கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களை பொருத்தமான கட்டங்களில் எழுதி, குறுக்கெழுத்துப் போட்டியைப் பூர்த்தி செய்க.




CAMP
CAMPFIRE
CAMPGROUND
CAMPSITE
CRAFTS
FISHING
GROUP
OUTHOUSE
POOL
TENT



## சரியான விடையில் வட்டமிடுக 5

1) 236 - XXIIIVI, CCXXXVI, CCIIIVI
2) 49 - XLIX, XXXXIX, XDIX
3) 507 - DVII, LVII, MLI
4) 33 - IIIXXX, VVVIII, XXXIII
5) 84 - LXIV, LXXXIV,XXCIV





தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2009.11.18 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 234
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு


## 1 ஆறு வித்தியாசங்களில் √ அடையாளமிடுங்கள்





## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 231 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
எஃப்.ரினோஸா, தரம் - 7C,
பதுரியா ம.கல்., மாவனல்லை.

**போட்டி: 02**
இன்சமாமுல் ஃபரீட், தரம் - 5B,
ஜாமியுல் அஸ்ஹர் ம.கல்., உடதலவின்ன.

**போட்டி: 03**
அலகர் சஜிவனி, தரம் - 4A,
கதிரேசன் இ.ம.கல்., நாவலப்பிட்டிய.

**போட்டி: 04**
லோ.மைப்பிரதாஸ், தரம் - 10R,
சிவானந்தா தே.பாட., மட்டக்களப்பு.

**போட்டி: 05**
மொஹமட் உசைத், தரம் - 9E,
பொத்துவில் ம.கல்., பொத்துவில்.

### பாராட்டுப் பெறுவோர்

- எம்.சி.மின்ஹாஜ், தரம்-7A,கனேவல்பொள மு.ம.வித்., கனேவல்பொள.
- க.நிலக்சன், தரம்-1A, வ.த.ம.ம.வித்., வவுனியா.
- எஸ்.எம்.ஏ.ஹஸன், தரம்-8C, ஸாஹிரா கல்., கம்பளை.
- டி.சரவணன், தரம்-8, புனித அந்தோனியார் கல்., நுவரெலியா.
- ற.சஹ்ரா, தரம்-9B, விபுலானந்தா கல்., திருகோணமலை.
- கி.கனிஷாறிதன், தரம்-7B, வ.த.ம.ம.வித்., வவுனியா.
- சீ.விதுஷியா, தரம்-6, இராமகிருஷ்ணமிசன் ம.வித்., கல்முனை.
- ரொனீஸ் மொஹமட், அல்-ஹகீமியா அ.கல்., உடதலவின்ன மடிகே.
- ஜோ.தேவநேசன், தரம்-9B, புனித பத்திரிசியார் கல்., தலவாக்கலை.
- அஸ்தக் அஹமட், தரம்-6, அரசினர் மு.ஆ.வித்., அக்கரைப்பற்று.

## அறிவுக்கு விருந்து 231 விடைகள்

**போட்டி: 01**


| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| G | F | C | Q | D | Q | A | B | Z | X | F | H | N | S | R |
| M | N | T | C | N | I | T | X | E | G | S | E | A | M | F |
| Z | J | O | G | O | B | N | C | I | E | S | R | S | S | Q |
| S | K | L | R | P | V | O | Q | K | B | Q | B | E | M | F |
| L | K | I | H | T | T | R | I | S | C | Q | I | L | A | M |
| X | A | C | I | R | S | P | O | A | A | W | V | A | L | K |
| X | Y | R | O | H | S | A | R | C | O | U | O | C | L | T |
| Z | T | M | G | R | Y | N | L | L | L | M | R | S | X | Y |
| E | Q | O | V | E | I | F | S | B | D | X | E | S | X | H |
| Q | Q | H | G | V | Q | P | L | A | N | T | S | V | K | N |
| C | R | H | O | X | E | U | X | E | E | G | L | S | Y | T |
| N | X | R | F | M | T | A | P | E | G | G | B | Q | Y | S |
| Q | E | L | C | Y | S | C | T | H | K | T | R | S | W | K |
| S | E | E | R | T | A | H | S | N | P | Z | G | Q | K | D |
| E | B | Y | K | Y | F | D | T | N | M | A | R | B | C | Q |

**போட்டி: 04**

அ) 26338
ஆ) 54263
இ) ✱ 6225 ✱✱ FMMY

**போட்டி: 05**

✱ மொனாலிசா
✱✱ 1 ஆவது படம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதிமுதல் மக்கள் வாழும் பழைமை மிக்க நகரம்





சிரியாவின் தலைநகரமும் பாரிய நகரமுமான டமாஸ்கஸ்தான் உலகின் பழைமை மிக்க நகரம். இதுவே, ஆதிமுதல் மக்கள் தொடர்ந்து வாழும் நகரம் என்னும் சிறப்பையும் பெறுகின்றது. இந்த நகரின் தற்போதைய சனத்தொகை சுமார் $16\frac{1}{2}$ லட்சத்துக்கும் மேலாகும்.

அராபிய மொழியில் டிமாஸ்க் அல்-ஷாம் (Dimashq al-sham) என்று அழைக்கப்படும் இந்த நகரம் சிரியா மக்களாலும் அண்டைய நாட்டு மக்களாலும் டிமாஸ்க் அல்லது அல்-ஷாம் என்று அழைக்கப்படுகிறது.

இந்த நகரின் புறநகர்ப் பகுதியான டெல் ரமாட் (Tell Ramad) என்னுமிடத்தில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சியிலிருந்து டமாஸ்கஸில் கி.மு 10,000 ஆண்டிற்கும் 8,000 ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் மக்கள் வாழ்ந்திருப்பது தெரியவந்துள்ளது. இதன்மூலமே டமாஸ்கஸ் உலகின் மிகப் பழைமை மிக்க நகரமென்றும் தெரியவந்துள்ளது.

இருப்பினும், மெசப்பத்தேமியாவின் அரேமியன்ஸ் இன மக்களின் வருகைவரை டமாஸ்கஸ் ஒரு முக்கிய நகரமாகக் கருதப்படவில்லை. அரேமியன்ஸ்களே கால்வாய்கள் மற்றும் குகைகளை அமைத்து நீர் விநியோக முறையை உருவாக்கினர். இதன் மூலமே பரடா (Barada) நதியின் முக்கியத்துவம் உணரப்பட்டது. இந்த நீர் விநியோக முறையே பின்னர் வந்தவர்களாலும் பின்பற்றப்பட்டது. இன்றைய காலம் வரை இந்த அடிப்படைகளையே அங்கு காணக்கூடியதாக இருக்கிறது.

தலைநகர் டமாஸ்கஸின் பிரதான நதி பரடாவாகும். இது ரேவ் (Rabwe) என்னும் உயர்ந்த செங்குத்தான மலையிலிருந்து பாய்கிறது. இதன் புராதன பெயர் பொன் ஓடை (Golden Steam) என்பதாகும்

# கம்போடியாவில் கானகத்துப் பெண்

கம்போடியாவின் கானகத்துப் பெண் என்று அழைக்கப்படும் பெண் ஒருவர் கிராமவாசிகளிடம் சிக்கியதை அடுத்து அவர் மீண்டும் காட்டுக்குச் செல்வதற்காக போராடி வருகின்றார். இந்தப் பெண் விவசாயி ஒருவரின் உணவை திருட எத்தனித்தபோதே மேற்படி கிராமவாசிகளிடம் சிக்கிக்கொண்டார். நிர்வாணமாகவும் அழுக்காகவும் இருந்த இந்தப் பெண் குரங்கு போல் தவழ்ந்தே செல்கிறார். கிராமவாசிகளிடம் சிக்கியிருந்த இவரை கம்போடியவாசி ஒருவர் அவள் தனது மகள் என்று அடையாளப்படுத்தியதையடுத்து இந்தப் பெண் பற்றிய பல விபரங்கள் தெரியவந்துள்ளன.

ரொச்சோம் என்னும் இந்தப் பெண் தமது 8 ஆவது வயதில் காட்டில் காணாமல் போயுள்ளார். அதன்பின்னர் 18 வருட காலத்தை காட்டுக்குள் கழித்த அவர் 2007 ஆம் ஆண்டு மீண்டும் கிராமத்துக்குள் வந்த போது கிராமவாசிகளிடம் சிக்கிக் கொண்டுள்ளார்.

இவரின் தந்தையாரான சல் லூ என்பவர் இவரை அடையாளம் கண்டு வீட்டுக்குக் கூட்டிச்சென்று பராமரிக்க எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் பலனளிப்பதாக இல்லை. உடைகளை அணிவித்தால் அதனை கழற்றி வீசி விடுகிறார். உணவு உண்ணவும் மறுக்கிறார். இவரைப் பேச வைப்பதற்கு எடுக்கும் முயற்சிகளும் சரிவரவில்லை. மிருகங்கள் போலவே கத்துகிறார். காட்டிலிருந்து வந்ததைவிட தற்போது மெலிந்து போய் எலும்பும் தோலுமாகக் காட்சியளிக்கும் இவரை மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்ததையடுத்து அங்கு மீண்டும் காட்டுக்குத் தப்பியோடுவதற்கு பலமுறை இவர் முயற்சி செய்துள்ளார்.



ரொச்சோம் (மத்தியில்) பெற்றோருடன்

ரொச்சோம் 1989 ஆம் ஆண்டிலேயே காட்டுக்குள் காணாமல் போயுள்ளார். இவரைத் தேடியலைந்த இவரின் பெற்றோர் இவர் மீண்டும் கிடைப்பார் என்னும் நம்பிக்கையை இழந்திருந்தபோது 2007 ஆம் ஆண்டு இவர் மீண்டும் கிராமத்துக்குள் வந்துள்ளார்.

இவரின் தந்தையாரான சல் லூ என்பவர் ஒரு கிராம பொலிஸ்காரர். இவர் அப்பெண்ணை அடையாளம் கண்டு இவர் நீண்ட காலத்துக்கு முன்னர் தொலைந்துபோன தனது மகள் என்று கூறி இவரை கட்டியணைத்து உச்சி முகர்ந்துள்ளார்.எனினும், தற்போது இவரை மீண்டும் காட்டுக்குள் போகவிடாமல் பாதுகாப்பது பெரும் சிரமமாக இருப்பதாகவும் இவரின் பெற்றோர்கள் தமது வேதனையை தெரிவித்திருக்கின்றனர்.

அத்துடன், பெற்றோர் இவரை எப்பொழுதும் கண்காணித்துக் கொண்டே இருக்கவேண்டியுள்ளது. தவறும்பட்சத்தில் இவர் உடைகளைக் களைந்து வீசிவிட்டு காட்டுக்குள் ஓட முயற்சிக்கிறார். கம்போடியாவில் இவர் வாழ்ந்த 'ரட்னக்கிரி' என்னும் காட்டுப்பகுதி மக்களோடு தொடர்பில்லாத ஆதிவாசிகள் வாழும் அடர்ந்த காடு என்று கூறப்படுகின்றது.

-ராஜா

# தீவுக்கூட்டம் பொலினேஷியா





பசுபிக் சமுத்திரத்தில் உள்ள பல தீவுகளின் கூட்டம் பொலினேஷியா (Polynesia) என்று அழைக்கப்படுகின்றது. கிரேக்க மொழியில் பொலஸ் (Polus) பல என்றும் நெஷொஸ் (Nesos) தீவு என்றும் இவை இரண்டும் சேர்ந்து 'பல தீவுகள்' என்று இது கூறப்பட்டாலும் இங்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட தீவுகள் உள்ளன. இங்குள்ள தீவுகளை சரியாகக் கணக்கிட முடியாமல் இருக்கிறது. இத்தீவுகளில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் குடியேறிய மக்களின் வாரிசுகள் வாழ்கின்றனர்.

பொலினேஷியா தீவுக்கூட்டத்தின் ஓரங்களில் ஹவாய், நியூஸிலாந்து, ஈஸ்ட்டர் தீவு என்பன அமைந்து இது முக்கோண வடிவில் காட்சி தருகிறது. பொலினேஷியாவில் அமைந்துள்ள பிரதான தீவுகள் சமோவா, டோங்கா, குக் ஐலண்ட்ஸ், டுவாலு, வாலிஸ், புட்டுனா, பிரெஞ்ச் பொலினேஷியா என்பனவாகும்.

பொலினேஷிய மக்கள் கடல் பயணங்கள் மூலம் இடப்பெயர்வுகளை மேற்கொண்ட அவுஸ்திரேனேஷியன் மக்களின் வழித்தோன்றல்கள் என்று அவர்களின் மொழியில் இருந்து தெரியவருகின்றது.

# எட்டுக்கால் நட்சத்திர மீன்



எட்டுக்கால்களையுடைய உடல் முழுவதும் முற்களுடன்கூடிய விசித்திர நட்சத்திர மீன் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நட்சத்திர மீன்களுக்கு சாதாரணமாக ஐந்து கால்களே இருக்கும். ஆனால், இந்த மீனுக்கு மேலதிகமாக மூன்று கால்கள் உள்ளன. 'ஸ்டான்லி' என்று பெயரிடப்பட்டுள்ள இந்த மீன் தற்பொழுது 'நியூகுவேஸ் புளூரீப்' நீர்வாழ் உயிரினக் காட்சியகத்தில் (Newguay's blue reef aquarium) வைக்கப்பட்டுள்ளது. சாதாரண நட்சத்திர மீனுடன் ஒப்பிடுகையில் இது இருமடங்கு பெரிதாகவும் இருக்கிறது.

நீர்வாழ் உயிரினங்கள் தொடர்பான வல்லுனர்கள் இந்த மீன் பிறப்பில் இரண்டு மீன்களாகப் பிறந்து ஒன்றாக இணைந்திருக்கக்கூடும் என்று கருதுகின்றனர்.

இந்த மீன் வாழும் தொட்டியில் 'ஒக்டோபஸ்' ஒன்றும் இருப்பதாகவும் இவை இரண்டும் நட்புறவுடன் பழகுவதாகவும் இந்த கண்காட்சியக முகாமையாளர் டேவின் வேய்ன் என்பவர் தெரிவித்தார்.


இந்த நீர்வாழ் உயிரின காட்சியகம் இங்கிலாந்தில் உள்ளது. இக்காட்சியகத்தில் கடல்வாழ் அபூர்வ உயிரினங்களைக் காணலாம். ராட்சத நண்டுகள், நீர்க்குதிரை, பல்வேறு இன மீன்கள் என்று ஏராளமான நீர்வாழ் உயிரினங்கள் இங்குள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மைக்ரோசொஃப்ட்' நிறுவனம் வழங்கும் இலவச மென்பொருள் பெக்கேஜ்






'மைக்ரோசொஃப்ட்' நிறுவனத்தினால் இளம் பிள்ளைகளுக்காக இலவசமாக மென்பொருள் பெக்கேஜ் ஒன்று வழங்கப்பட்டு வருவதாக கணினித்துறை செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த பெக்கேஜுக்கு 'ட்ரீம்ஸ்பார்க்' என்று பெயரிடப்பட்டுள்ளது. ஏற்கனவே இது அறியப்பட்ட விடயமாக இருந்தாலும் புதிய மென்பொருட்கள் இணைக்கப்பட்டுள்ளமையினால் தற்போது இதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

2008 ஆம் ஆண்டு பெப்ரவரி 19 ஆம் திகதியன்று 'மைக்ரோசொஃப்ட்' நிறுவனத்தின் தலைவர் பில் கேட்ஸ் அமெரிக்காவின் 'ஸ்டென்ஃபர்ட்' பல்லைக்கழகத்தில் விரிவுரையொன்றை நடத்துகையில், உலகின் எதிர்கால தலைமுறையினருக்காக இலவச மென்பொருள் பெக்கேஜ் ஒன்றை வெளியிடுவதற்கான நடவடிக்கைகளில் கைரோசொஃப்ட் நிறுவனம் ஈடுபட்டு வருவதாகத் தெரிவித்தார்.

அவர் அன்று கூறிய அந்த கருத்தே இன்று செயல்வடிவம் பெற்றுள்ளது. இந்த 'ட்ரிம்ஸ்பார்க்'மென்பொருள் பெக்கேஜை பெற்றுக்கொள்கின்றவர்கள் இன்று உலகம் பூராவும் பரவியுள்ளனர் எனலாம்.

உயர்தர மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கே இந்த பெக்கேஜ் வழங்கப்படுகின்றது. எனவே, இவர்கள் தமது விபரங்களை 'மைக்ரோசொஃப்ட்' நிறுவனத்திற்கு வழங்குவதன் மூலம் மேற்படி இலவச பெக்கேஜை பெற்றுக்கொள்ளமுடியும். இவ்வாறு 'ட்ரீம்ஸ்பார்க்' பெக்கேஜுடன் இணைபவர்கள் 'எக்ஸ்பிரஷன் ஸ்டூடியோ', 'கேம்ஸ் ஸ்டூடியோ', 'ரொபேடிக்ஸ் ஸ்டூடியோ' ஆகிய செய்நிரல்களை (Programm) இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும். இவை மட்டுமன்றி 'விஷுவல் ஸ்டூடியோ 2008', 'எஸ்கியூஸ் சேர்வர்' மற்றும் 'வேர்ச்சுவல் பீஸி' ஆகிய செய்நிரல்களையும் இதில் பெற்றுக்கொள்ளமுடியும்.

அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளைச் சேர்ந்த பிள்ளைகள் எதிர்கால தொழில்நுட்ப வளர்ச்சி, மாற்றங்கள் ஆகியவற்றிற்கேற்ப தாமும் தொழிற்படுவதற்கான பக்குவத்தை அடையச் செய்யும் நன்நோக்கிலேயே இவ்வாறான இலவச சேவையொன்றை செய்வதற்கு தாம் தூண்டப்பட்டதாக மைக்ரோசொஃப்ட் நிறுவனம் தெரிவித்துள்ளது. இதன்மூலம் வறுமையின் காரணமாக திறமையுள்ள இளைஞர்களை உலகம் இழக்கும் வாய்ப்பு நீக்கப்படுகின்றது. இந்த வழிவகையின் மூலம் கோடிக்கணக்கான பிள்ளைகள் தமது கணினி அறிவை மேலும் பெருக்கிக் கொள்ள வாய்ப்புக் கிட்டியுள்ளதாக கருதப்படுகின்றது.







இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2009, நொவெம்பர் மாதம் 11 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday November 11, 2009.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org